# மன்னா

# எத்தகைய கடினமாக சூழ்நிலையிலும் கருக்கலைப்பை அனுமதிக்க முடியாது!

## இலங்கை ஆயர் பேரவை திட்டவட்டம்

இலங்கை அமைச்சரவை கருக்கலைப்பை சட்டமுலாக்கும் மசோதாவை பாராளுமன்றில் சமர்ப்பிக்க இருக்கும் நிலையில் இலங்கை ஆயர் பேரவை கத்தோலிக்க திருச்சபையின் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இலங்கை ஆயர் பேரவையானது அண்மையில் ஒன்றுகூடியபோது இவ்விடயம் தொடர்பாக ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி அவ்வறிக்கையை வெளியிட்டுள்ளது.



அவ்வறிக்கையானது எந்த வகையிலும், எந்தச் சூழ்நிலையிலும் கருக்கலைப்பை சட்டபூர்வமாக்குவதை மறுதலித்து நிற்கின்றது. கத்தோலிக்க திருச்சபையின் கோட்பாட்டின்படி ஒரு குழந்தை தாயின் கருவில் உருவாகும்போதே மனித உயிரை முழுமையானக் கொண்டுள்ளது. மேலும் இது புனிதமானது. மனித உயிரைப் பறிப்பதற்கு எச்சூழ்நிலையிலும் எவருக்கும் உரிமையும் இல்லை, விதிவிலக்கும் இல்லை.

நீதியானது எவ்வகையிலும் சமரசத்திற்கு உள்ளாக்கப்படக்கூடாது. சிறப்பாகத் தாயின் கருவில் இருக்கும் குழந்தையின் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் கருக்கலைப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருவர் தனது உரிமையைப் பாதுகாக்க மற்றவருடைய உரிமையைப் பறிக்கவோ, அழிக்கவோ முடியாது என அவ்வறிக்கை அமைகிறது.

இவ்வறிக்கையினை இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் பேரருட்திரு ஜே. வின்ஸ்ரன் பெர்னாண்டோ ஆண்டகையும் பேரவையின் பொதுச்செயலர் பேரருட்திரு டி. வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகையும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ளனர்.

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் மடுவுக்கு விஜயம்







கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ஜனாப் ரவூப் ஹக்கீம் அவர்கள் மடுத்திருப்பதிக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். இதன்போது மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார், மடுப்பரிபாலகர் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் ஆகியோரைச் சந்தித்து அவர் உரையாடினார்.

மடுத்தேவாலயத்தில் நிலவும் குடிநீர் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

# மோசமான காலநிலையின் மத்தியிலும் சிறப்பாக இடம்பெற்ற மடு ஆவணித் திருவிழா







கடும் மழை, வெள்ளம் போன்ற மிகவும் மோசமான காலநிலையின் மத்தியிலும் மடு ஆவணித் திருவிழா சிறப்பாக இடம்பெற்றது. ஓகஸ்ட் 14ஆம் திகதி பகல் பெய்த கடும் மழை காரணமாக வழக்கமாக இடம்பெறும் வேஸ்பர் ஆராதனை மற்றும் நற்கருணைப் பவனி இடம்பெறவில்லை. கடுமையான மழை வெள்ளம் காரணமாக வாடிகளில் தங்கியிருந்த மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளானார்கள். ஆயினும் அன்று இரவு மழை சற்று குறைந்திருந்ததால் 15ஆம் திகதி காலை திருவிழாத் திருப்பலி வழக்கம்போல சிறப்பாக இடம்பெற்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலயத் திருப்பொழிவும் திறப்பு விழாவும்





சிறுக்கண்டல் பங்கின் தாய் ஆலயமான புனித அந்தோனியார் ஆலயத்தின் திருப்பொழிவும் திறப்பு விழாவும் கடந்த ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்தைத் திருப்பொழிவு செய்து திறந்து வைத்தார். தொடர்ந்து திருப்பலி இடம்பெற்றது. திருப்பலியைத் தொடர்ந்து ஒன்றுகூடல் இடம்பெற்றது. இதன்போது வரலாற்றோடு தொடர்புடைய மலர் ஒன்று வெளியிடப்பட்டது. ஆலயக் கட்டுப்மானப் பணிகளுக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றி கூறப்பட்டது. சிறுக்கண்டல் பங்குத்தந்தை அருட்திரு. எமில் எழில்ராஜ் நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். (இவ்விழா தொடர்பான மேலதிக படங்களை 8ஆம் பக்கத்தில் காணலாம்)

# முதலமைச்சரின் கருத்துத் தொடர்பாக கத்தோலிக்கர் ஆழந்த அதிருப்தி



கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற கேள்வி பதில் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகளுக்கு முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன் அவர்கள் பதில் வழங்கியபோது திருத்தந்தையையும் அவரது பத்திரிகைப் பகிர்வுகளையும்பற்றிப் பிரஸ்தாபித்தமை கத்தோலிக்க பொதுநிலையினரதும் குருக்கள், துறவிகளதும் உணர்வுகளைப் புண்படுத்தியிருந்தமையை அவதானிக்கக் கூடியதாயிருந்தது என யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையின் முழு வடிவத்தை 11ஆம் பக்கத்தில் காணலாம்.

# மன்னார் பிரஜைகள் குழுவின் புதிய தலைவராக அருட்திரு. ஏ. ஞானப்பிரகாசம்



மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் புதிய தலைவராக மன்னார் சிறிய குருமட அதிபர் அருட்திரு. ஏ. ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே இவர் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை முன்னிலையில் இக்கூட்டம் இடம்பெற்றது. பிரஜைகள் குழுவின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட ஞானப்பிரகாசம் அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தின் நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்வடைகின்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## வெள்ளி, பொன் விழாக்களைக் காணும் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 20ஆம் திகதி தனது ஆயர் பணியில் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளி விழாக் காண்கிறார். அதேபோன்று எதிர்வரும் டிசம்பர் 13ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 50 வருடங்களை நிறைவுசெய்து பொன் விழாக் காண்கிறார்.

இப்பெரு நிகழ்வுகளின்போது யோசேப்பு ஆண்டகை அவர்களின் பணிவாழ்வின் சிறப்புக்கள் பற்றி விதந்துரைக்கப்படும்; பல்வேறு மட்டங்களில் இருந்து பாராட்டு மழைகள் பொழியப்படும். பல்வேறு தரப்பினரும் வாழ்த்துக்கள் கூறுவர்; அவருடைய அரும் பணிகளுக்காக பல்வேறு தரப்பினரும் நன்றி கூறுவர். இவையெல்லாம் இவ்விழாக்களின்போது இயல்பாக நடைபெறும் வழக்கமான விடயங்கள்தான். இவை தேவையானதுதான்; இவற்றில் தவறில்லை; இவை அனைத்திற்கும் அவர் தகுதியானவர்தான்.

பாராட்டு, வாழ்த்து, நன்றி போன்ற இந்த வழக்கமான செயற்பாடுகளுக்கு அப்பால் ஆயர் யோசேப்பு ஆண்டகையின் இந்தப் பெருநிகழ்வுகளின்போது அவருடைய வாழ்வையும் பணிகளையும் முன்னிறுத்தி ஈழத்துத் திருச்சபை மனங்கொள்ளவேண்டிய சில முக்கிய விடயங்கள் உண்டு. அவற்றில் ஒன்றுதான் ஆயருடைய வாழ்வும் பணியும் இன்றைய திருச்சபைக்கு, எதிர்காலத் திருச்சபைக்கு எத்தகைய செய்திகளைத் தருகின்றது? எத்தகைய சவால்களை விடுக்கின்றது? எனச் சிந்திப்பதாகும்.

ஈழத்தமிழர் வரலாற்றில் என்றுமில்லாத கொடிய போர்ச்சூழல் நிலவிய காலத்தில் ஆயர் யோசேப்பு ஆண்டகை குரலற்ற தமிழ் மக்களின் குரலாக ஒலித்தார். உண்மைகளை எடுத்துக்காட்டிய, நீதியை வலியுறுத்திய அவருடைய குரல் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஓங்கி ஒலித்தது. தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள், சொல்லொண்ணாத் துன்பங்கள் போன்றவற்றை உள்நாட்டு ஊடகங்கள் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை நிலவிய அந்த நாட்களில் இவருடைய அறிக்கைகளும், நேர்காணல்களும், தகவல்களும் உண்மை நிலையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிச்சம் போட்டுக் காட்டின. இதன்மூலம் அன்றைய ஆட்சியாளர்கள் உண்மையை எதிர்கொள்வதில் ஆட்டம் கண்டனர்; சர்வதேச சமூகத்தின் கேள்விகளை எதிர்கொண்டனர்; ஆயருடைய செயற்பாடுகள் குறித்து முகம் சுழித்தனர்.

ஆயர் யோசேப்பு ஆண்டகை இயல்பாகவே இறைவாக்கினருக்குரிய துணிவைப் (Prophetic Courage) பெற்றிருந்தார். துன்புறும் மக்களுக்காக இரங்கும் இரக்க உள்ளத்தையும் அவர் பெற்றிருந்தார். இவை அனைத்திற்கும் மேலாக காலத்தின் தேவைக்கு பதில் அளிக்க வேண்டிய ஒரு நல்ல திருச்சபைப் பணியாளனுக்குரிய தெளிவையும் அவர் கொண்டிருந்தார்.

தன் ஆடுகளுக்காக உயிர் கொடுத்த நல்லாயன் இயேசுவை அவர் தன் கண்முன் கொண்டிருந்தார். அந்த நல்லாயன் வழியில் பயணித்த திருச்சபையின் துணிவுமிக்க பல பணியாளர்கள் பற்றியும் அவர் அறிந்திருந்தார். பேராயர் ஒஸ்கார் றொமேறோ, பேராயர் டெஸ்மன்ட் டூட்டு, அருட்திரு. மேரி பஸ்ரியன் போன்ற திருச்சபைப் பணியாளர்களின் வாழ்வால் அவர் தூண்டப்பட்டிருந்தார். இவர்களின் பாதையில் உண்மைக்கு சாட்சியாக, ஏழைகளுக்கு மீட்சியாக அவர் திகழ்ந்தார்.

ஆயர் யோசேப்பு ஆண்டகை பணி செய்த காலம் ஊடக சுதந்திரம் மறுக்கட்ட ஓர் இக்கட்டான காலம். "யுத்தத்தில் முதலில் கொல்லப்படுவது உண்மை" என்று சொல்வார்கள். தமக்கு வேண்டாதவர்களை, தமக்கு சவால் விடுக்கின்றவர்களை ஆளும் தரப்பினர் காணாமலாக்கச் செய்தனர்; கொலை செய்தனர்.

இப்படியான உயிராபத்துமிக்க ஒரு காலகட்டத்தில்தான் ஆயர் யோசேப்பு ஆண்டகையின் பணி நடைபெற்றது. அவருடைய உயிருக்கு வெளிப்படையாகவே ஆபத்து இருந்தது. இது தொடர்பான அக்கறையை அன்றைய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் தன்னைச் சந்திக்க வந்த அன்றைய அரசுத் தலைவரிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே ஆயர் யோசேப்பு ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழாவையும், குருத்துவப் பொன் விழாவையும் கொண்டாடவுள்ள தமிழ் கூறும் நல்லுலகம், குறிப்பாக ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபை, இன்னும் குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயர் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற விழைய வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். அவருடைய வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு சவாலாக, விழிப்புணர்வாக, உந்துதலாக அமைய வேண்டும். அமையுமா?

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன் அருட்திரு. தமிழ் நேசன்,**
**மன்னா பதிப்பாசிரியர்**

## துயர் பகிர்கின்றோம்

கார்மேல் சபை அருட்சகோதரி டிலக்சி பத்திநாதன் அவர்களின் அன்புத்தந்தையும் டிலாசால் அருட்சகோதரர் எஸ். ஸ்ரனிஸ்லோஸ் அவர்களின் அன்புச் சகோதரருமான திரு. சுவக்கீன் ஜேம்ஸ் பத்திநாதன் அவர்கள் கடந்த 26.07.2017 அன்று இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஆன்மா அமைதியடையச் செபிப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்னார் மறைமாவட்ட சமூகம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

## மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம்
# 'கலையருவி' நடாத்தும் போட்டிகள்
### பங்கெடுப்பீர் .....! பயன்பெறுவீர்....!

புனித யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி' பல்வேறு போட்டிகளை நடாத்துகின்றது. இப்போட்டி தொடர்பான விபரங்கள் சென்ற மாத (ஓகஸ்ட்) மன்னா பத்திரிகையில் வெளியாகியுள்ளது. இதைவிட மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துப் பங்குத் தந்தையர்களுக்கும் இது தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே பங்குத்தந்தையர்கள், பங்குகளிலும் பாடசாலைகளிலும் பணியாற்றும் அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், மறையாசிரியர்கள், திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் உங்கள் பங்கில் உள்ள பிள்ளைகளையும் மற்றவர்களையும் இப்போட்டிகளில் பங்கேற்க ஊக்குவிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**- இயக்குனர் - கலையருவி -**


## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### புரட்டாதி

03. மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் வாரம் (03-10)
05. புனித அன்னை திரேசா திருவிழா - புதிய கோயில்குளம்
08. தூய வேளாங்கண்ணி திருவிழா - சாவற்கட்டு, கங்கங்குளம், கருவேப்பங்குளம், எல்லப்பர் மருதங்குளம், புதிய கற்பகபுரம்
- புனித கன்னி மரியாவின் பிறப்பு விழா - நானாட்டான், மாவிலங்கேணி, கரிசல், இலுப்பைக்குளம், குஞ்சுக்குளம், விடத்தல்தீவு, எழுத்தூர், சாளம்பன், நடுக்குடா, நொச்சிகுளம், மாறாஇலுப்பை, காட்டாஸ்பத்திரி, தலைமன்னார் பியர், மூங்கில்முறிச்சான், பாலியாறு, வேளாங்கண்ணி நகர், பாரதிபுரம், கங்கங்குளம்.
- ஆரோக்கிய மாதா திருவிழா - பூம்புகார்
- தூய அடைக்கல அன்னை திருவிழா - பறண்நாட்டகல், நடுக்குடா
10. தூய வேளாங்கண்ணி அன்னை திருவிழா - தோணிக்கல்
11. வேளாங்கண்ணி அன்னை திருவிழா - கட்டுக்கரைக்குளம்
14. குருசுக்கோவில் திருவிழா - மன்னார்
- திருச்சிலுவை அருட்சகோதரிகள் விழா
15. வியாகுல அன்னை திருவிழா - அடம்பன், சின்னவலயன்கட்டு
17. வேளாங்கண்ணி அன்னை திருவிழா - ஓமந்தை
18. அடைக்கல மாதா திருவிழா - முருகனூர்
22. தூய சிந்தாத்திரை மாதா திருவிழா - பெரியமுறிப்பு
24. தூய சிந்தாத்திரை மாதா திருவிழா - பாப்பாமோட்டை
27. தூய சதாசகாய மாதா ஆலயம் - சகாய மாதா புரம்
28. தூய வேளாங்கண்ணி மாதா திருவிழா - தாமரைக்குளம்
- அடைக்கல மாதா திருவிழா - கருவாஞ்சிக்குளம்
29. தூய மிக்கேல் திருவிழா - தரவன்கோட்டை, தாலிக்குளம்
- புனித சவேரியார் திருவிழா - கோட்டக்குளம்

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## அருட்சகோதரி லியோ இறைபதம்



திருக்குடும்ப துறவற சபையைச் சார்ந்த அருட்சகோதரி லியோ அவர்கள் இம்மாதம் (செப்ரம்பர்) 3ஆம் திகதி இளவாலையில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி 4ஆம் திகதி இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் நடைபெற்றது.

யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நல்லடக்கத் திருப்பலி இடம்பெற்றது. அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்திரு. எட்வின் வசந்தராஜா அடிகளார் மறையுரை ஆற்றினார். அருட்சகோதரி லியோ அவர்கள் அருட்தந்தை பிரான்சிஸ் டானியல் (அமதி) அவர்களின் சிறிய தாயார் என்பது குறிப்பிடத்தக்கது.

டானியல் அடிகளாருக்கும் திருக்குடும்ப சகோதரிகளுக்கும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தின் ஆழந்த இரங்கலை மன்னா தெரிவித்துக்கொள்கின்றது. அருட்சகோதரியின் ஆன்மா ஆன்டவனின் சந்நிதியில் அமைதி பெறுவதாக!

## அடுத்த மன்னா
### ஆயர் யோசேப்பு ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழாச் சிறப்பிதழாக வெளிவரும்

மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 20ஆம் திகதி ஆயர் பணியில் 25 வருடங்களை (1992 - 2017) நிறைவு செய்து வெள்ளி விழாக் காண்கிறார்.

இதை முன்னிட்டு ஒக்ரோபர் மன்னா ஆயர் யோசேப்பு ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழாச் சிறப்பிதழாக வெளிவரும். ஆயர் தொடர்பான ஆக்கங்களை (கவிதை, கட்டுரைகள் போன்றவற்றை) செப்ரம்பர் 25ஆம் திகதிக்கு முன்பு எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். தரம் கண்டு பிரசுரிப்போம். - **ஆசிரியர் - மன்னா**

## விடுமுறைக்காக வந்துள்ள மன்னார் மறைமாவட்ட அருட்சகோதரர்கள்





குருத்துவ உருவாக்கம் பெற்றுக்கொண்டிருக்கும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் தமது பெரிய விடுமுறைக்காக மறைமாவட்டத்திற்கு வந்துள்ளனர்.

பெரியகட்டு மற்றும் மடு திருத்தலத் திருவிழாக் காலங்களில் அவர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர். ஒன்றிணைந்த விடுமுறை நிகழ்ச்சி, பங்குகளில் பதிவுகளைப் பிரதி செய்தல், குடும்பத்தினருடன் தங்கியிருத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து இம்மாதம் (செப்ரம்பர்) 23ஆம் திகதி இவர்கள் தமது குருமடங்களுக்குத் திரும்பிச் செல்வர். யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இரண்டு குருமடங்களிலும் 25 அருட்சகோதரர்கள் தமது குருத்துவ உருவாக்கத்தைப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்


*- மன்னா நிர்வாகம் -*

# 'பாகிஸ்தான் அன்னை தெரேசா' வின் வாழ்க்கை வரலாறு பாடத்திட்டத்தில்

பாகிஸ்தானில் தொழுநோயுற்றோர் மத்தியில் உழைத்து 'பாகிஸ்தான் அன்னை தெரேசா' என அழைக்கப்பட்டு அண்மையில் இறையடி சேர்ந்த மருத்துவரான அருட்சகோதரி றுத் அவர்களின் வாழ்க்கை வரலாறு பாகிஸ்தான் பள்ளிப்பாட நூல்களில் இடம்பெற வேண்டும் என பாகிஸ்தான் கத்தோலிக்க திருஅவை அரசிடம் விண்ணப்பித்துள்ளது. 'இளையோர் முன்னேற்ற அறக்கட்டளை' என்ற பெயரில் பாகிஸ்தானில் செயலாற்றும் மாணவர் அமைப்பு விடுத்த இந்த விருப்பத்தை தலத்திருஅவை ஆதரித்துள்ளது.

தனது 87 வருட உலக வாழ்வில் 56 வருடங்களைப் பாகிஸ்தானில் தொழுநோயுற்றோருக்கென அர்ப்பணித்த அருட்சகோதரியின் அடக்கச்சடங்கு கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி கராச்சி புனித பாட்ரிக் பேராலயத்தில் முழு அரச மரியாதையுடன் நடத்தப்பட்டது. பாகிஸ்தான் தேசிய கொடியால் மூடப்பட்ட அவரது சவப்பெட்டியை இராணுவ வீரர்கள் சுமந்து சென்று கிறிஸ்தவ கல்லறையில் அடக்கம் செய்தனர்.

## ஒரு மாத விவிலியக் கற்கை நெறிக்காக இந்தியா பயணம்



அருட்திரு. றெறன்ஸ் குலாஸ் — அருட்திரு. லோறன்ஸ் லியோன்

பொன்தீவுகண்டல் பங்குத்தந்தை அருட்திரு. லோறன்ஸ் லியோன் மற்றும் கீளியன்குடியிருப்பு பங்குத்தந்தை அருட்திரு. றெறன்ஸ் குலாஸ் ஆகியோர் ஒரு மாத விவிலியக் கற்கை நெறிக்காக இந்தியாவில் உள்ள பெங்களூருக்குச் சென்றுள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகிய இந்தக் கற்கைநெறி செப்ரம்பர் மாதம் இறுதியில் நிறைவுபெறும். இவர்களுக்கு மன்னாவின் செபங்களும் நல்வாழ்த்துக்களும்.

## இவ்வாண்டு யூபிலி விழாக் காணும் திருக்குடும்ப அருட்சகோதரிகள்

**துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காண்போர்:**

1. அருட்சகோதரி றீற்றா மேரி கெலன் றொபேட்
2. அருட்சகோதரி லூமினா போல்றாஜ்
3. அருட்சகோதரி செல்வராணி தொபியாஸ்
4. அருட்சகோதரி மெற்றில்டா வசந்தி பிரான்சிஸ்
5. அருட்சகோதரி மரினா அலக்சாண்டர்
6. அருட்சகோதரி மேரி நிர்மலா ஆபேல்
7. அருட்சகோதரி லுட்வின் கிறிஸ்ரா மரியதாசன்
8. அருட்சகோதரி றெஜினா கீதபொன்கலன்

**துறவற வாழ்வில் 50 வருடங்களை நிறைவுசெய்து பொன் விழாக் காண்போர்:**

1. அருட்சகோதரி மேரி எலிசபேத் சவரிப்பிள்ளை
2. அருட்சகோதரி மேரி பேக்மன்ஸ் மனுவல்பிள்ளை
3. அருட்சகோதரி மேரி பிரான்சிஸ் யோசவ்
4. அருட்சகோதரி மேரி காமன் இம்மானுவேல்
5. அருட்சகோதரி மேரி பெனிக்னஸ் நீக்கிலாப்பிள்ளை

**துறவற வாழ்வில் 60 வருடங்களை நிறைவுசெய்து மணி விழாக் காண்போர்:**

1. அருட்சகோதரி யூடெக்ஸி செபமாலை
2. அருட்சகோதரி மேரி அலிஸ் சோசை
3. அருட்சகோதரி மேரி யூஜின் சோசை
4. அருட்சகோதரி லோறா மார்சலின்

தமது துறவற வாழ்வில் வெள்ளி விழா, பொன் விழா, மணி விழா ஆகியவற்றைக் கொண்டாடும் திருக்குடும்ப அருட்சகோதரிகள் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்டச் சமூகத்தின் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா பேருவகை அடைகின்றது.

## செபமாலைக் கன்னியர்களின் பொது அமர்வு

சுதேச துறவற சபையான செபமாலைக் கன்னியர்களின் பொது அமர்வு (Generel Chapter) எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வில் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்திரு. பி. ஏ. தோமஸ் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை ஆசியாவிலேயே முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட தியானயோக (Contemplative Order) துறவற சபையாகும். இச்சபையின் பொது அமர்விற்கு தூய ஆவியின் பிரசன்னம் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என செபிப்போம்.

## அன்புக் கன்னியர் சபைக்கு புதிய மேனிலை முதல்வர்



இயேசு மரியின் அன்பின் சகோதரிகள் (The Sisters of 'Charity of Jesus and Mary) துறவற சபையின் புதிய மேனிலை முதல்வராக (உலகளாவிய தலைவியாக - Superior General ) கேரளாவைச் சேர்ந்த அருட்சகோதரி லூசி ஜேக்கப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அன்புக் கன்னியர்கள் என்று அழைக்கப்படும் இச்சபையினர் மன்னார் மறைமாவட்டத்தில் செட்டிகுளம், கோமரசன்குளம், பட்டித்தோட்டத்தில் உள்ள வயோதிபர் இல்லம் மற்றும் நிவேதனம் இல்லம் ஆகியவற்றில் பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சந்திரகாசன் நாடக அரங்கேற்றம்

**விருத்தம்**

தரை புகழ் கூமாந்தருப் பற்றதனில் வாழும்
தனகனன் லோறென்சு மொத்தம் சந்தானாசான்
கருதிய கேள்விக்கிசைந்து விறாசு மொத்தம்
கபிரிகேற் பாவலன் சந்திரகாசன்றன் சரிதையை
நாடகமெனச் செந்தமிழாற் பாடிச்
சங்கைவளர் சத்துரிய சாதியார்க்கு
அரிதுறுநன் கொடையெனக் கையளித்ததை
அறிவுடையோர் முறையுடன் கையாள்வாரென்றே...

மன்னார் மாவட்டத்தின் இருபத்தொன்பது கிராமங்களின் ஆதரவுடன் இருபத்தொரு ஆண்டுகளின்பின் அமரர் விறாஸ் மொத்தம் கபிரிகேல் புலவரால் எழுதி வடிமைக்கப்பட்ட சந்திரகாசன் நாடம் அரங்கேற்றப்படவுள்ளது.

**இடம் : பரலோக மாதா (கூட்டத்து மாதா) ஆலய முன்றல், பறப்பாங்கண்டல்.**
**திகதி : 12, 13, 14 புரட்டாதி, 2017 மூன்று இரவுகள்.**
**அரங்க நிகழ்வுகள் தினமும் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

வருக! வருக! இறையாசீர் பெறுக!

- பங்குத்தந்தை, குருகுல மகா சபை, பரலோக மாதா ஆலயம், பறப்பாங்கண்டல்

## கடவுளின் பணியாளர் சபை மேனிலை முதல்வர் மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை



கடவுளின் பணியாளர் துறவற சபையின் மேனிலை முதல்வர் (Superior General) அருட்சகோதரி டலர் அவர்கள் ஒரு வாரப் பயணமாக மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை தந்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் களிமோட்டை, சிறுத்தோப்பு, தோட்டவெளி ஆகிய இடங்களில் உள்ள கடவுளின் பணியாளர் சபைக் கன்னியர் இல்லங்களை அவர் தரிசித்துவிட்டு கடந்த யூலை மாதம் 30ஆம் திகதி இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டி









மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட மறைமாவட்ட விளையாட்டுப் போட்டியானது கடந்த 17.06.2017 சனிக்கிழமை முருங்கன் கிறிஸ்து அரசர், டொன் பொஸ்கோ விளையாட்டு மைதானங்களில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் கலந்துகொண்டு சிறப்பித்ததோடு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் கலந்துகொண்டு தன்னுடைய ஆசீரை வழங்கியிருந்தார்.

நான்கு மறைக்கோட்டங்களிலும் இருந்து வெற்றிபெற்ற பங்குகள் இம்மறைமாவட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டு இருந்தனர். இதில் ஆண்களுக்கு கிரிக்கெட் போட்டியும், பெண்களுக்கு எல்லே போட்டியும் இடம்பெற்றன.

இதில் நானாட்டான், கோமரசன்குளம், அரிப்பு, மாந்தை, ஓமந்தை, தாழ்வுபாடு, செட்டிகுளம், வேப்பங்குளம் வங்காலை ஆகிய பங்குகளில் இருந்து இளைஞர், யுவதிகள் பங்குபற்றி தம்முடைய திறமையை வெளிக்காட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**கிரிக்கட் போட்டி - ஆண்கள்**

1ம் இடம் : கோமரசன்குளம் பங்கு இளைஞர் ஒன்றியம்
2ம் இடம் : தாழ்வுபாடு பங்கு இளைஞர் ஒன்றியம்
3ம் இடம் : வங்காலை பங்கு இளைஞர் ஒன்றியம்.

**எல்லே - பெண்கள்**

1ம் இடம் : கோமரசன்குளம் பங்கு இளைஞர் ஒன்றியம்
2ம் இடம் : தாழ்வுபாடு பங்கு இளைஞர் ஒன்றியம்
3ம் இடம் : ஓமந்தை பங்கு இளைஞர் ஒன்றியம்.

இப்போட்டி நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும்

**- இயக்குனர், இளைஞர் ஆணைக்குழு**

# மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் தற்கொலைகள்

## ஓர் சமூக உளவியல் பார்வை

கவிஞர் வை. கஜேந்திரன்

இந்தப் பரந்து விரிந்த உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பிறப்போடு வாழ்க்கை தொடங்குகிறது. இறக்கும்வரை அது தொடர்கின்றது. இந்தப் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் பல்வேறு அனுபவங்களின் ஊடாகப் பயணிக்கின்றான்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து அன்பால் உருவாக்குகின்ற இந்த உலக வாழ்க்கை அழகானது. அந்த அழகிய வாழ்க்கையை வாழமுடியாமல் பலர் எடுக்கும் முடிவுகள் ஏராளம். அதில் முதன்மையானது தற்கொலை! இன்றைய உலகில் சாதாரண விடயமாகிப்போன தற்கொலை பற்றிய ஒரு கண்ணோட்டத்தையே இங்கு காணப்போகின்றோம்.

### தற்கொலை என்றால் என்ன?

தற்கொலை என்பது ஆங்கிலத்தில் 'சுவிசைட்' (Suicide) என்று அழைக்கப்படுகின்றது. ஒரு மனிதனுக்கு ஏற்படுகின்ற தாங்கிக்கொள்ள முடியாத இயற்கை அனர்த்தங்கள், சமூகக் காரணிகள், சூழலியல் பிரச்சினைகள் போன்றவற்றால் ஏற்படுகின்ற மன அழுத்தம், உள நெருக்கீட்டின் விளைவாக தாங்கிக்கொள்ள முடியாமல், ஏற்றுக்கொள்ள முடியாமல் வாழ்க்கையை வெறுத்து எடுக்கும் முடிவே தற்கொலை!

### தற்கொலை உணர்வுக்கான காரணம்

மிகையான மனச்சோர்வு, மதுப்பழக்கத்திற்கு ஆழாகும் நிலை, எல்லாவற்றையும் இழந்த நிலை, நம்பிக்கையற்ற உணர்வு போன்றவை மேலோங்கும்போது தற்கொலை உணர்வு ஒருவருக்கு ஏற்படுகின்றது. சமூகம், குடும்பம், நண்பர்கள், உறவினர் போன்றவர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்காத நிலையில் இருக்கும்போது ஒருவர் தற்கொலை போன்ற தவறான முடிவுக்கு தள்ளப்படுகின்றார். ஒருவரின் தற்கொலை அல்லது தற்கொலை முயற்சியானது பின்னர் அது பலரின் தற்கொலைக்கு முன்மாதிரியாகவும் அமைந்துவிடுகின்றது.

### தற்கொலை செய்துகொள்ளும் வழிகள்

தூக்கில் தொங்குதல், விஷம் அருந்துதல், தூக்க மாத்திரை அதிகமாய் உட்கொள்ளல், கிணற்றில் குதித்தல், எரியூட்டிக் கொள்ளுதல், கழுத்தினை அறுத்துக்கொள்ளல், புகைவண்டியில் பாய்தல் எனப் பல வழிகளில் தற்கொலைகள் இடம்பெறுகின்றன.

### மன்னார் மாவட்ட சூழ்நிலை

மன்னார் மாவட்டத்தில் பிரதான தொழில்களாக இருப்பது விவசாயமும் கடற்தொழிலும்தான். ஏனைய இதர தொழில்கள் எல்லாம் இந்த இரண்டு தொழில்களையே நம்பியுள்ளன.

விவசாயத்தை எடுத்துக்கொண்டால் தற்போதைய சூழலில் இயற்கையின் காலநிலை மாற்றத்தினாலும் மழைவீழ்ச்சி இல்லாமையினாலும் செயற்கைப் பசளை அதாவது கெமிக்கல் பாவனையாலும் நிலவறட்சியும் விளைச்சல் இன்மையும் விவசாய உற்பத்தியை மிகவும் பாதித்துள்ளது.

அதுபோல கடற்தொழிலை எடுத்துக்கொண்டால் இந்திய மீனவர்களின் ரோலர் வருகையாலும், தென்னிலங்கை மீனவர்களின் வருகையாலும் கடற்தொழில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. வழித்து அள்ளப்படும் மீன்குஞ்சுகள் காரணமாக மீன்களின் இனப்பெருக்கம் இல்லாமையினால் மீன்பிடியும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.


இவ்வாறிருக்க ஏனைய தொழில் துறைகளிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வியாபாரத்தில் நஷ்டம், வேலையிழப்பு, வருவாய் இழப்பு .... குடும்பங்களில் செலவீனங்களைச் சமாளிக்கத் திணறும் மக்கள் கடன் வாங்குகிறார்கள். தாம் பெற்றுக்கொள்ளும் கடன்கொடுப்பனவுகளின் வட்டிப்பணத்தை மீளச்செலுத்த முடியாமல் திண்டாடுகின்றார்கள். வாழ்க்கைச் சுமையை சுமக்க முடியாத நிலையில், வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் பலர் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். இதுபோன்ற இன்னும் சொல்ல முடியாத பல வாழ்க்கைச் சுமைகளுக்குமான ஒரே தீர்வாக அவர்கள் நினைப்பது தற்கொலையைத்தான்!

### மாவட்டத்தின் சூழ்நிலையைச் சீரமைத்தல்

மன்னார் மாவட்டத்தில் உள்ள வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்றால் வெறுமனே 06 மாதம் 01 வருடம் என்று வழங்கும் பயிற்சி வகுப்புக்களால் எந்தப்பலனும் ஏற்படப்போவதில்லை. ஒரு பயிற்சியை நிறைவுசெய்தால் உடனே வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அப்படியான வேலைத்திட்டத்தினை உருவாக்கல் வேண்டும். அத்தோடு இளைஞர் யுவதிகளுக்கான - அவர்களின் தராதரத்திற்கு ஏற்ப என்ன வேலைகளைச் செய்யலாம்? என்ன படித்தால் உடன் வேலைகிடைக்கும்? என்ற வழிகாட்டல் விழிப்புணர்வு மையம் ஒன்று அமைக்க வேண்டும். இலவச ஆலோசனை வழங்க வேண்டும். மனச்சோர்வு, மனக்குழப்பம் போன்றவை உள்ளவர்களுக்கு மனவள ஆலோசனை மையம் ஒன்றை அமைத்து இலவசமான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்குதல் வேண்டும்.

கல்வியை இடை நிறுத்தும் மாணவ மாணவிகளுக்கு அவர்களின் விருப்பம் அறிந்து புதிய தொழிற் கல்வியினை வழங்குவதற்கான வழிகளைக் கண்டறிதல் வேண்டும்.

உயர்தரம் மற்றும் பல்கலைக்கழகம் கிடைக்காத மாணவ மாணவிகளுக்கு ஏதோ ஒரு வகையில் உயர்கல்வியினை பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். ஒரு தீப்பொறி எவ்வாறு பெரிய தீச்சுவாலையாக எரிகின்றதோ அதேபோல் மாணவர்கள், மாணவிகள், இளைஞர், யுவதிகள் போன்றோர் மனதில் தன்னம்பிக்கை, நேர்மறைச் சிந்தனை போன்றவற்றை பதிய வைத்து அது வளர்ந்து பலன்கொடுக்க



பயிற்சியளிக்க வேண்டும். நல்லெண்ணங்களையும், நம்பிக்கையினையும் விடாமுயற்சியினையும் அவர்கள் பயிற்சியாக்கி, பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். இதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள் இவர்களுக்கு உதவ வேண்டும். வாழ்வில் ஏற்படுகின்ற துன்பங்களைத் தாங்கி, வெற்றிபெறத் தேவையான நம்பிக்கையினை வழங்கும் விதமாகக் கூட்டாக இணைந்து செயலாற்றும் தன்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இன்றைய இளம் தலைமுறையினரை நல்வழியில் வழிநடத்தினால் நாளைய உலகம் நல்ல தலைமுறையைக் கொண்டிருக்கும். நமது கலாசாரமும், பாரம்பரியமும் காக்கப்படும், போற்றப்படும்.

### தற்கொலை எண்ணத்திற்கான காரணங்கள்

மனச்சோர், விரக்தி, பாசமின்மை, பாசத்திற்கான ஏக்கம், பரீட்சையில் தோல்வி, பெண்களுக்கான துஸ்பிரயோகங்கள், மனதைப் புண்படுத்தும் வார்த்தைகள், அழகு மற்றும் பணத்தின்மீது கொண்ட அதீத ஆசை, காதலின் ஊடே வந்த காமமும் மோகமும், அதிகமான கட்டுப்பாடுகள், விதிமுறைகள், கருத்தூன்ற முடியாமை, சொந்தக்காலில் நிற்க முடியாமை, எதிர்காலத்தின்மீதான அவநம்பிக்கை, துன்பகரமான எண்ணங்களைத் திரும்பத்திரும்ப மீட்டிப்பார்த்தல், தனிமை, ஒதுங்கியிருத்தல், சோம்பல், மெதுவாக இயங்குதல், இலவசமாய் எல்லாம் கிடைக்கவேண்டும் என்ற எண்ணம், படிப்பிற்குத் தகுதியான வேலையின்மை, எதிர்பார்ப்புக்களினால் ஏற்படும் ஏமாற்றம், அதிகமான கவலைகள், ஈடுசெய்ய முடியாத இழப்புக்கள் என தற்கொலைக்கான காரணங்கள் பலவுள்ளன.

தொலைபேசி, மோட்டார் பைக் வேண்டித்தரவில்லை என்றும் தொடர் நாடகங்கள் பார்க்கமுடியவில்லை என்று தற்கொலை செய்பவர்களும் உண்டு.

### தற்கொலை எண்ணங் கொண்டவர்களை இணங்காணுதல்

பெரும்பாலானவர்கள் தங்களின் தற்கொலை எண்ணத்தினை தமக்கு நெருங்கியவர்களிடம் கூறிக்கொள்ளவே செய்கின்றார்கள். அந்தத் தருணங்களில் நாம் பாராமுகமாய் இராமல் தடுத்தல் அவசியம். பெரும்பாலும் வயது வந்தவர்களும், கட்டிளமைப் பருவத்தினரும் தற்கொலையில் ஈடுபடும் வாய்ப்புக்கள் அதிகமாய் உள்ளன. அதுபோலவே இளம்பராயத்தினர் உணர்ச்சி மேலீட்டினாலும், வயதுவந்தவர்கள் நன்கு திட்டமிட்டும் தற்கொலைகளைச் செய்கின்றனர்.

ஒருவர் தற்கொலை எண்ணத்தினை வெளிப்படுத்தும்போது நாம் அவதானமாக இருத்தல் வேண்டும். தற்கொலையினைத் தடுப்பதற்கு பல்வேறு வழிமுறைகளை, திட்டங்களைக் கையாளவேண்டும்.

### மதுப்பழக்கம்

பெரும்பாலான ஆண்கள் தற்கால நிவாரணியாக மதுப்பழக்கத்திற்கு ஆளாகின்றார்கள். குடும்பத்தின் சூழல், சமத்துவமின்மை, பதற்றம், நெருக்கீடுகள் போன்ற பிரச்சினைகளில் இருந்து விடுதலை பெறுவதற்காக இவர்கள் மதுவிற்கு அடிமையாகின்றார்கள்.

இந்த மதுப்பழக்கமானது உடல் உள உபாதைகளையும் நீண்டகாலப் பாதக விளைவுகளையும் ஏற்படுத்துவதோடு மனோபலத்திலும் நடத்தைக்கோலங்களிலும் பெருமளவிலான மாற்றங்கள் ஏற்பட வழிவகுக்கின்றது. மதுப்பழக்கத்தினால் அறிவியற் தொழிற்பாடுகள் மாற்றமடையும். அதைவிட தற்கொலை எண்ணமும், விபத்து, கொலை, குடும்ப உறவில் சிக்கல் மற்றும் பாலியல் பிரச்சினைகள் எனப் பல விளைவுகள் மதுப்பாவனையால் விளைகின்றன.

மதுப்பாவனையானது முன்னைய காலத்தில் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை. ஆனால் இன்று அதுவே மனித செயற்பாடுகள் அனைத்திலும் மதிப்பிற்குரியதாக, அந்தஸ்தானதாக, அங்கீகரிக்கப்பட்ட தொன்றாக மாறியுள்ளது. இந்த மாற்றமானது சமூகமயமாக்கலின் விளைவாக ஏற்பட்டதெனலாம். மது உற்பத்தி விநியோக நிறுவனங்களின் விளம்பரமும் இதற்கானதொரு காரணமாக இருக்கலாம்.

மதுப்பழக்கமானது எவ்வாறு ஒரு நபரின் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை எல்லா உறுப்புக்களையும் பாதிக்கின்றதோ அதுபோல அந்த மதுப்பாவனைப் பழக்கமுள்ள நபரால் மருத்துவம், சுகாதாரம், பொருளாதாரம், சமூகம், குடும்பம் குறிப்பாக குழந்தைகள் பாதிக்கப்படுவதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். மதுப்பழக்கமானது மனச்சோர்வு, தற்கொலை எண்ணம், வன்முறைக் குற்றங்கள் போன்றவற்றின் பிறப்பிடமாகத் திகழ்கின்றது. வறுமையும் ஏழ்மையும் மதுவின் வாரிசுகள்.

### மனச்சோர்வு

மனிதனுக்கு ஏற்படுகின்ற உள நெருக்கீடுகள், தாங்கமுடியாத துன்பங்கள், எதிர்மறையான எண்ணங்கள் ஏற்படுத்துகின்ற தாக்கம், மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற எதிர்மறையான சிந்தனைகள்தான் மனச்சோர்வு ஆகும். காலப்போக்கில் இது ஒரு நோயாக மாற்றம் பெறுகின்றது. உளநலக் குறைபாடு மனச்சோர்வு ஆகும். எண்ணங்கள், உணர்ச்சிகள், உடற்தொழில் கோலம் ஏற்படுத்தும் விளைவுகள்தான் மனச்சோர்வின் அடிப்படை காரணங்களாகும்.

### கவலை

கவலைப்படுதல் என்பது அன்றாடம் ஏற்படும் ஒரு உணர்வு. அதிலிருந்து நாம் சில நிமிடங்களில் விடுபடுகின்றோம். ஒரு துன்பமான நிகழ்வு காரணமாகக் கவலை ஏற்படுதல் ஒரு சாதாரண நிகழ்வாகும். ஆனால் கவலை என்ற உணர்ச்சி நீண்டு நிரந்தரமாக ஒருவரது வாழ்வில் ஒரு அங்கமாக மாறும்பொழுது அது மனச்சோர்வின் அறிகுறியாக அமைகின்றது.

### தற்கொலை எண்ணம்

அடிக்கடி ஒருவர் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என எண்ணுவதும், அதிக நாள் திட்டமிடுவதும் ஒரு சாதாரண விடையமல்ல. அது அவருக்கு ஏற்படும் மனச்சோர்வின் பாதிப்பிற்குள் மூழ்கி இருப்பதன் வெளிப்பாடாக அமைதல் கூடும். ஒருவர் தற்கொலை எண்ணங்களை வெளிப்படுத்துவாராயின் அது புறக்கணிக்கக்கூடிய ஒரு விடையமல்ல. அவ்வெளிப்பாட்டினைப் புரிந்துகொண்டு அதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபடுதல் அவசியமாகும்.

பெரும்பாலாக தற்கொலை செய்துகொள்பவர்கள் தாம் தற்கொலை செய்துகொள்வதற்கு முன்பு அவ்விடையத்தினை வெளிப்படுத்துகின்றார்கள். எனவே அதை நாம் அபாய அறிவிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும். சிலவேளைகளில் அன்புக்குரியவர்களின் மற்றும் உறவினர்களின் மனதைக் காயப்படுத்தவும் அவர்களை உளவியல் ரீதியாக துன்புறுத்தவும் சிலர் தற்கொலை எண்ணத்தினை வெளிப்படுத்துவது உண்டு.

### நம்பிக்கையின்மை:

ஒருவர் அதிகம் நம்பிக்கையற்றவராக, அதுவும் எதிர்கால வாழ்வில் நம்பிக்கையற்றவராகக் காணப்படுவாராயின் அதை ஒரு குறிப்பிடத்தக்க - அலட்சியப்படுத்த முடியாத விடையமாகக் கொள்ள வேண்டும். எமது வாழ்க்கைச் சக்கரம் சுழல்வதற்கு அடிப்படையானது நம்பிக்கையே ஆகும். அந்த அச்சாணியினை ஒருவர் தொலைப்பாராயின் அது அவரது வாழ்வினை முற்றாகத் தொலைப்பதற்கு ஒத்ததாக அமைகின்றது. நம்பிக்கையின்மையும் தற்கொலை எண்ணமும் ஒருவரிடம் காணப்படுமாயின் நாம் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

### குடும்பச் சூழல்

சண்டை சச்சரவு நிறைந்த குடும்பச் சூழலில் வளர்ந்தவர்களும், மணமுறிவு செய்துகொள்ளும் பெற்றோர்களின் பிள்ளைகளும் தற்கொலை உணர்வுக்கு அதிகம் ஆளாகின்றனர். உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டவர்களிடையேயும் தற்கொலை எண்ணம் அதிகமாகக் காணப்படுகின்றது.

சந்தோசங்களையும், துக்கங்களையும், துயரங்களையும் பகிர்ந்துகொள்ளக்கூடிய உறவுகள், நண்பர்கள் அற்றவர்களுக்கும் தற்கொலை எண்ணம் ஏற்படுகின்றது.

### மனச்சோர்வில் இருந்து விடுபட

இசையினை இரசித்தல், நல்ல புத்தகங்களை வாசித்தல், நகைச்சுவையினைக் கேட்டலும் பார்த்தலும், நண்பர்களுடன் மனம் விட்டுப்பேசுதல் போன்றவை ஊடாக மனச்சோர்வில் இருந்து வெளிவரலாம். சிலருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். சிலருக்கு உளவள ஆலோசனை - உளவள சிகிச்சை தேவைப்படலாம். மனச்சோர்வு தீவிரமாக இருந்தால் பௌதீகச் சிகிச்சைகள் தேவைப்படுகின்றன. மென் மின் அதிர்ச்சிச் சிகிச்சை முறைகள், நவீன மாத்திரைகள் போன்றவை அதிக பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதில்லை; மனச்சோர்வையும் தீர்க்கின்றன.

### எதிர்மறை எண்ணங்களை நிராகரித்தல்

எதிர்மறை எண்ணங்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டு அவையே எமது வாழ்வின் அங்கமாகவும் ஒரு பழக்கமாகவும் மாறிவருவதால் அவை எமது துயர மனநிலையைத் தக்கவைத்து மனச்சோர்வினை ஏற்படுத்துகின்றன. இவற்றினை அடையாளம் கண்டு நிராகரிப்பதற்கு யதார்த்தமான நேர் எண்ணங்களை எம்மில் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் சுய இரக்கத்தினைத் தவிர்த்து தன்னம்பிக்கையினை ஏற்படுத்தி மனச்சோர்வில் இருந்து விடுபட முயற்சிக்க வேண்டும்.

### எதிர்மறை எண்ணங்களைக் கையாளுதல்

எமது எண்ணங்களே எமது மனோபலத்திற்கு ஆழமான காரணமாக அமைகின்றன. எண்ணங்கள் எமது மனவெளியினை நிறைத்து நிற்கும்பொழுது அது எமது முகபாவத்தினை பெருமளவில் நிர்ணயிக்கின்றன.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மகாவலி மாதா திருத்தல விழாவில் வங்காலைப் பங்கு மக்கள்







நாட்டின் கிழக்கு அம்பாறை நிர்வாக மாவட்டத்திலும் பதுளை மறைமாவட்ட பரப்பெல்லையிலும் தெகியத்தகண்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரும்பான்மை இன மக்கள் வசிக்கும் இயற்கை எழிலுறு கிராமம்தான் லத்பந்துற.

கடந்தகால யுத்த சூழ்நிலையால் தென்பகுதி மக்களுக்கு தற்காலிகமாக தடைப்பட்ட மடுத்திருத்தல யாத்திரை காரணமாக அம்மக்களின் ஆன்மீக வாஞ்சையை ஓரளவேனும் தணிப்பதற்காக 1990இல் அத்திவாரமிடப்பட்டு 1992இல் மக்கள் பாவனைக்கு விடப்பட்ட திருத்தலம்தான் லத்பந்துற மகாவலி மாதா திருத்தலம். இம்மாதா மகாவலி C வலய மக்களின் பாதுகாவலியாகவும் போற்றப்படுகிறாா்.

திருத்தல ஆரம்பம் பல்வேறு எதிர்ப்புகளுக்கும் சவால்களுக்கும் மத்தியில் மௌனித்த பயணமாக அமைந்திருந்தது. நாளடைவில் அன்னையின் கருணை மற்றும் அற்புதங்களுடன் அயலில் வாழும் பிறசமய மக்களின் பூரண ஆதரவுடன் இத்திருத்தலம் வளர்ச்சிகண்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி இவ்வருடத் திருவிழாவிற்கான கொடியேற்றம் இடம்பெற்றது. ஏறக்குறைய 2 கிலோமீற்றா் தூரம்வரை நீல/ வெள்ளைக் கொடிகள் நடப்பட்டு ஓகஸ்ட் 19ஆம் திகதி மாலைப் புகழ்ச்சித்தினம் அன்று தேவநற்கருணைப் பவனி இடம்பெற்றது.

மாலைப் புகழ்ச்சி ஆராதனையின்போது தமிழ் மறையுரையை அருட்பணி. மில்வர் வாஸ் (CMF) அடிகளார் வழங்கினார். திருவிழாத் திருப்பலியில் தமிழ் மறையுரையை யாழ் மறைமாவட்டக் குரு அருட்பணி. யாவிஸ் அடிகள் வழங்கினார்.

அதே தினம் இடம்பெற்ற காலை முதல் தமிழ் திருப்பலியை வங்காலை பங்குத்தந்தை அருட்பணி சீ. ஜெயபாலன் அடிகளார் நிறைவேற்றியதுடன் திருவிழாத் திருப்பலியை அடுத்து அன்னையின் இறுதிச் செபத்தையும் தமிழில் பக்திப் பரவசத்துடன் ஓப்புவித்தார்.

20.08.2017 ஞாயிறு அன்று திருவிழாத் திருப்பலியின் ஆரம்ப நிகழ்வுகளில் அயல் பிரதேசங்களின் பௌத்த பீடாதிபதிகளும் முக்கிய அரச அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர். பதுளை மறைமாவட்ட ஆயரும் இலங்கை ஆயர் மன்றத் தலைவருமான மேதகு வின்ஸ்ரன் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக நிறைவேற்றப்பட்டது.

25 வருட திருத்தல வரலாற்றில் தமிழ் மொழியில் திருப்பலி நிறைவேற்றவும் இறைபுகழ்ச்சிப் பாடல்களை பாடவும் வங்காலைப் பங்கு மக்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றிகள் பல. அத்துடன் இத்தலத்தில் சகல வழிபாடுகளிலும் மொழிச்சமத்துவம் பேணப்பட்டமை பாராட்டப்பட வேண்டியதுடன் வழிபாட்டு நிகழ்வுகளில் கலாசார முறைமைகள் பேணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட திருத்தல பரிபாலகர் அருட்பணி. சாம் பெரேரா அடிகளின் விசேட அழைப்பின் பேரில் வங்காலை ஆலய அருட்பணிப்பேரவை உறுப்பினர்கள், புனித செசிலியா பாடகர் குழாம் மற்றும் பீடப்பணியாளர்கள் வங்காலைப் பங்குத்தந்தையின் தலைமையில் சென்று திரும்பியமை மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

தகவல்: S. சூசைநாயகம் றெவல் (JP), செயலாளர், புனித ஆனாள் ஆலய அருட்பணிப்பேரவை, வங்காலை.

# லியோன்சின் புனித வளன் சபை உங்களை அழைக்கிறது!

## SISTERS OF ST. JOSEPH OF LYONS

**தங்கையே,** உங்களை எம் வளன் சபை அன்போடு வரவேற்கிறது. அன்று "ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, 'உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தாரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்' என்றார்" (தொ.நு.12:1). இன்று ஆண்டவர் உங்களையும் அதற்காகவே அழைக்கிறார். புறப்படு மகளே! புறப்படு!!

**எம் சபையின் தோற்றம்:**

தோன்றிய இடம் : பிரான்ஸ் (லியோன்ஸ்) - 1650
தோற்றுவித்தவர்கள் : அருட்தந்தை ஜான்பீட்டர் மெதாய் சே.ச மற்றும் அன்னை ஜான்போண்ட் போன்
இந்தியாவில் தோற்றம் : மதுரை - 1906
இலங்கையில் தோற்றம் : மன்னார் (நொச்சிக்குளம்)- 2012
இலங்கையில் எம் இல்லங்கள் : மன்னார், நொச்சிக்குளம் யாழ்ப்பாணம் (மணல்காடு).

**எம் சபையின் பணிகள்:**

கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூகப்பணி, சிறார் நல்வாழ்வுப் பணி, முதியோரைக் கண்காணிக்கும் பணி, பார்வையற்றோரை வாழ்வில் ஊக்குவிக்கும் பணி, அயல்நாடுகளில் எம் அன்புப் பணி.

எம் சபை வேரோடிய இடங்கள்: பிரான்ஸ், அமெரிக்கா, மெக்சிகோ, எகிப்து, ஆப்பிரிக்கா, ஐவரிகோஸ்ட், புர்கினோ பாஸோ, இங்கிலாந்து, இந்தியா, இலங்கை, அயர்லாந்து, லெபனன் கிரீஸ், சுவிஸ்சர்லாந்து, பெல்ஜியம்.

**இந்தியாவில் :** தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மத்தியபிரதேசம், ஓரிசா, ஆந்திரப் பிரதேசம்.

**தகுதி :** இறைப்பணியில் ஆர்வம், நல்ல உடல்நலம், 10th/ OL/AL மற்றும் அதற்கு மேல் படிப்பு.

**தொடர்பு கொள்க:**



Vocation promoter,
San Jose Nilaya Formation House.
Hospital Road, Convent Lane.
Mannar - Srilanka.
Mobile:0773727865 CDMA:0232251803

# மன்னாரின் தேவைகளை வலியுறுத்தி கையெழுத்துப் பதிவும் மகஜர் கையளிப்பும்





'மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டம்' என்னும் அமைப்பு 'மன்னாரின் எழுச்சி அதுவே எங்களின் முயற்சி' எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 16 விடையங்களை மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தி அவற்றை வலியுறுத்தும் வகையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி மன்னார் பழைய நூலகத்திற்கு முன்பாக கையெழுத்துப் பதிவை மக்களிடம் பெற்றுக்கொண்டனர்.

மன்னாரின் நான்கு மதத் தலைவர்கள் இக்கையெழுத்துப் பதிவு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். இந்த அறிக்கை ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வடமாகாண முதலமைச்சர் மாண்புமிகு நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களிடம் அவரது அலுவலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

# சிலாபம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 5 தியாக்கோன்மார் அன்பிய வாழ்வு குறித்து விசாரித்தறிய மன்னார் பேராலயப் பங்கிற்கு வருகை





சிலாபம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து தியாக்கோன்மார் கடந்த யூலை மாதம் 27ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு வருகை தந்து அன்பிய வாழ்வு குறித்து விசாரித்தறிந்தனர். இவர்கள் சிலாபம் மறைமாவட்டத்தின் அன்பிய இயக்குனரும், இலங்கைத் தேசிய அன்பியக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான அருட்பணி. அலெக்சாந்தர் லைலி பெர்னான்டோ அடிகளார் தலைமையில் மன்னாருக்கு வந்தனர். மன்னார் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. அலெக்சாந்தர் ஆரோக்கியம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் மன்னார் பேராலயப் பங்கில் இரண்டு அன்பியங்களைத் தரிசித்தனர்.

அன்பிய ஏழு படி நற்செய்தி இறைவார்த்தைப் பகிர்வு, தனிப்பட்ட வாழ்க்கை அனுபவப்பகிர்வு போன்ற விடயங்கள் குறித்து அன்பியக் குழுக்களிடம் இவர்கள் கற்றுக்கொண்டனர். மன்னார் பேராலயப் பங்கில் நடைபெற்றுவரும் அன்பியக் குழுக்களின் வாராந்த அன்பிய வழிபாடு குறித்து பெரிய கமம் வலயத்தில் அறிந்துகொள்ளவும், அன்பிய இணைப்பாளர்களின் செயற்பாடுகள் குறித்து பெற்றா வலயத்தில் அறிந்துகொள்ளவும் மாலை வேளையில் அன்பிய ஒன்றுகூடல் ஒழுங்குசெயற்பட்டிருந்தது. "அனைவருக்குமான இல்லம் அன்பியம்" என்பதைக் காணமுடிகிறது என்றும் பங்கு வாழ்வானது மக்களின் வாழ்வில் வேரூன்றி உள்ளதையும் அறியமுடிகிறதென சிலாபம் மறைமாவட்டக் குழுவினர் பாராட்டினர்.

தகவல் :- D.P.F.ஞானபிரகாசம்,அன்பியத் தொடர்பகம், மன்னார்.

## யாழ் மரியாயின் சேனையினரின் இறுவட்டு

'அம்மா உந்தன் சேனையிலே' என்ற தலைப்பில் யாழ்ப்பாண மறைமாவட்ட மரியாயின் சேனையினர் ஒரு பாடல் இறுவட்டை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

இலங்கையில் மரியாயின் சேனையைத் தாபித்த அருட்திரு. அலெக்சாண்டர் இராஜநாயகம் அவர்களின் நினைவாக மரியாயின் சேனையோடு தொடர்புடையதான பாடல்களைக் கொண்டதாக இந்தப் பாடல் இறுவட்டு அமைந்துள்ளது.

இந்த இறுவட்டைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்கள் பின்வரும் பெயர் முகவரியோடு தொடர்புகொள்ளலாம் :




*அருட்திரு. எம். றெஜி இராஜேஸ்வரன்,*
*இயக்குனர்,*
*மரியாயின் சேனை,*
*ஆயர் இல்லம்,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி : 0776365836*

# மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

# நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகானவை!

**ஆக்கம், பீ. கிறிஸ்பி குரூஸ், பேசாலை**

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்ற இந்த வார்த்தை கேட்பதற்கு இனிமையாகவும் நற்செய்தி அறிவிக்க எம்மை உந்தித்தள்ளுகின்ற வார்த்தையாகவும் இருக்கின்றது. இந்த வார்த்தைதான் எம்பெருமான் இயேசு விண்ணேற்றம் அடையும்முன் சீடர்களோடு பேசிய இறுதிவார்த்தை. இந்த வார்த்தை தூய பவுல் அடிகளாரின் இதயத்தைத் தொட்டுவிட்டது. அதனால்தான் "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு" என்று ஒவ்வொரு உள்ளத்தையும் தட்டி எழுப்புகிறார் (1கொரி. 9:16). நற்செய்தியை அறிவிப்போர் திருச்சபையை வளர்ச்சியுறச் செய்கிறார். அதேவேளை வளர்ச்சியையும், ஊக்கத்தையும், ஆறுதலையும் பெற்றுக்கொள்கிறார்கள் (1கொரி 14:3). நற்செய்தி அறிவிப்பது மாபெரும் பணி. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

நற்செய்தியை எப்படி அறிவிப்பது? "மனித ஞானத்தின் அடிப்படையிலான சொற்களில் இந்நற்செய்தியை அறிவித்தலாகாது. அப்படி அறிவித்தால் கிறிஸ்துவின் சிலுவை பொருளற்றுப் போய்விடும்" (1கொரி. 1:14). நற்செய்தியை அறிவிக்க முதலில் நற்செய்தியை அறிய வேண்டும். இயேசுவை முழுமையாக அறியாமல் இயேசுவை அறிவிக்க முடியாது. அவரை அறியவேண்டுமாயின் அவரோடு இணைந்திருக்க வேண்டும். மூன்று நிலைகளில் ஒருவரால் வேறோருவரோடு இணைந்திருக்க முடியும்.

### உடல் ரீதியான ஒருங்கிணைப்பு

"இயேசு மலைமேல் ஏறி தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் அவர் பன்னிருவரை நியமித்தார்" (மாற் 3:13-15). 'என்னைப் பின்செல்' என்ற ஒரு சொல்லுக்கு சீடர்கள் கட்டுப்பட்டார்கள். குடும்பத்தை விட்டு, செய்துகொண்டிருந்த தொழிலை விட்டு, சொந்த பந்தம் சுகம் என்று எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருக்குப் பின்னால் போனார்கள். இடையில் யாரும் விட்டுவிட்டுப் போனதாகச் சொல்லப்படவில்லை. இயேசுவோடுகூட நடந்தார்கள், உணவு உண்டார்கள், படுத்துறங்கினார்கள். அவருடைய வார்த்தைகளை உள்வாங்கினார்கள். அவருடைய அரும் அடையாளங்களையும், அற்புதங்களையும் கண்ணால் கண்டார்கள். "நாங்கள் கண்ணால் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது" (தி.பணி 4:20).



ஒரு சக்தி அவர்களைக் கட்டி வைத்திருந்தது. அதுதான் அவருடைய உடனிருப்பு. உடல் ரீதியான ஒருங்கிணைப்பு. இயேசுவின் தொடுகை, பார்வை, வார்த்தை அவர்களோடு இருந்தது. இருந்தது. முதலில் அவர்களுக்குத்தான் தனது உடலை பிட்டுக்கொடுத்தார். நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக சீடர்களின் பாதங்களைக் கழுவினார். "எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்" என்று முதன் முதலாக நற்செய்தி அறிவிக்கும் பணியையும் ஒப்படைத்தார். என்னோடு இணைந்திருந்தாலன்றி உங்களால் கனி கொடுக்க முடியாது. இது இயேசுவோடு இணைந்திருந்த உடல் ரீதியான அழைப்புநிலை.

### அறிவு ரீதியான ஒருங்கிணைப்பு

"மானிட மகன் யாரென்று மக்கள் சொல்லுகிறார்கள்" என்று கேட்டபின்பு தம் சீடர்களிடம், "ஆனால் நீங்கள் நான் யாரெனச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்கிறார். சீமோன் பேதுரு மறுமொழியாக "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் என்று உரைத்தார்" (மத் 16:15-16). இந்த விசுவாச அறிக்கையினால் அறிவுபூர்வமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டு அறிக்கை செய்கிறார்கள்.

சமாரியப் பெண்ணை பார்க்கிறோம். இயேசு தண்ணீர் கேட்டபோது நீர் 'யூதர்' என்றாள். வாழ்வு தரும் தண்ணீர் என்னிடம் உண்டு என்றபோது 'ஐயா' என்றாள். கொஞ்ச நேரத்துக்கு பிறகு நீர் ஒரு 'இறைவாக்கினர்' என்றாள். இன்னும் கொஞ்ச நேர உரையாடலுக்குப்பிறகு கிறிஸ்து எனப்படும் 'மெசியா' என்றாள். பிறகு ஊரைக் கூட்டி அவர் உண்மையிலேயே உலகின் 'மீட்பர்' என அறிந்துகொண்டோம் என்று மீட்பராக அறிக்கை செய்கிறார்கள்.

இயேசு யாரென்று பார்க்க மரத்தின்மீது ஏறியிருந்தான் சக்கேயு. இயேசு அவனிடம், "சக்கேயுவே விரைவாய் இறங்கி வா" என்றவுடன் இயேசுவை அறிந்தவனாக இறங்கி வருகிறான். தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றான். அறிவு தூய ஆவியின் கொடை. அறிவுத்தெளிவோடு நற்செய்தி அறிவிக்க வேண்டும். இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவியானவர் அனைத்தையும் தெளிவுபடுத்துவார்.

### இதயபூர்வமான ஒருங்கிணைப்பு

"யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா? (யோவா 21:15) என மூன்று முறை கேட்டார். "ஆம், ஆண்டவரே அன்பு செய்கிறேன்" என்று பேதுரு பதில் சொல்கிறார். "என் ஆடுகளை மேய், குட்டிகளை மேய், பேணி வளர்" என பணிப்பொறுப்பு கையளிக்கப்படுகிறது. மெசியா என்று அறிக்கை செய்தவரிடம், உம்மை அன்பு செய்வது உமக்குத் தெரியுமே என்று அர்ப்பணித்தவரிடம் பணி வாழ்வு கையளிக்கப்படுகிறது. "யாரிடம் செல்வோம் இறைவா?" என்று பேதுரு தற்கையளிப்பு செய்தார். "நீ பாறை, இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" என இயேசு பேதுருவிடம் பணிப்பொறுப்பைக் கையளித்தார். நற்செய்தி அறிவிப்புக்கான தலைமைப்பீடம் கட்டியெழுப்பப்படுகின்றது.

### பல்வேறுபட்ட அறிவிப்புப் பணிகள்

இயேசு பரிவு கொண்டார் என்று நற்செய்தியில் பார்க்கிறோம். பரிவு என்றால் இரக்கத்துக்குமேல் ஒரு படி உயர்வு, அதாவது பேரிரக்கம். அளவுக்கதிகமான அன்பு என்று பொருள் கொள்ளலாம். நல்ல சமாரியன் காயப்பட்டவன்மேல் பரிவுகொண்டான். அது இரக்கச் செயலுக்கான அறிவிப்புப்பணி. ஊதாரி மகனை பாசமிகு தந்தை அன்பொழுக ஏற்றுக்கொண்டார். இது ஒருவரை ஒருவர் அன்பு செய்வதன் அறிவிப்புப்பணி. இயேசுவின் பாதத்தில் விழுந்தாள் பாவியாகிய மரியா. இது அர்ப்பணிப்பின் அறிவிப்புபணி. ஆடையை தொட்டால் போதும் என்றாள் பெரும்பாடுள்ள பெண். இது விசுவாச அறிவிப்புப் பணி. இவர்கள் இதயபூர்வமாக இறைவனை ஏற்றுக் கொண்டவர்கள். இவர்கள் பாதங்கள் அழகானவை. அதனால் இவர்கள் பெயரும் வாழ்வுதரும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2 திமொத்தேயு 4:2 சொல்லுவதுபோல் "இறைவார்த்தையை அறிவிக்க வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச்செய்வதில் கருத்தாய் இரு. மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு. நாமும் எழுந்து ஒளி வீசுவோம்.

# மடுப்பதியில் பொழிந்த பெருமழை

## மடுப்பதியின் வரலாற்றுப் பின்னணியின் ஊடாக ஓர் ஆன்மீகப் பார்வை

**அருட்திரு. பி. ஜேசுராஜா,**
**பங்குத்தந்தை, தூய அடைக்கல அன்னை ஆலயம்,**
**எழுத்தூர், மன்னார். (முன்னையநாள் மடுப்பரிபாலகர்)**

இலங்கை நாட்டில் அதிஉயர் நிலையில் உள்ள புனிதத் தலம் என்றால் அது மடுத்திருப்பதிதான். 350 வருடங்களுக்கு முன்னதாக மன்னார் மாந்தைப் பகுதியில் குடிகொண்டிருந்த செபமாலை அன்னையானவள் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இடம்பெற்ற வேதகலாபனை காரணமாக மாந்தைவாழ் மக்களோடுகூட இடம்பெயர்ந்தாள். அடர்ந்த காட்டுப் பிரதேசத்தினுள் புகுந்து, 'மருதமடு' என அழைக்கப்பட்டுவந்த இடத்தைத் தனது வசிப்பிடமாகத் தெரிந்துகொண்டாள். அன்றைய தினமே செபமாலை அன்னையானவள் 'மடு அன்னை' என்ற நாமம் சூடிக்கொண்டாள்.

தற்போதய ஆலயப் போட்டிக்கோ மண்டபத்திற்கு முன்பாக வலப்புறத்தில் அன்று கம்பீர தோற்றத்துடன் காட்சி அளித்து நின்ற மரத்தின்கீழ் அகதி வாழ்க்கை வாழ்ந்து வந்தார் மரியன்னை. கிறிஸ்தவர்களுக்கெதிரான வேதகலாபனை காரணமாக யாழ் குடாநாட்டிலிருந்தும் பெருந்தொகையான கிறிஸ்தவர்கள் பூநகரிப் பாதையூடாக பயணம் செய்து இறைவனது வழிநடத்துதலின் காரணமாக மடுப்பிரதேசத்தை வந்தடைந்து, மாந்தை மக்களோடு இணைந்துகொண்டதோடு செபமாலை அன்னையை வழிபடும் பாக்கியத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஒருசில மாதங்களில் வேதகலாபனை முடிவுக்கு வந்தது. மடுப்பிரதேசத்தில் வாழ்க்கை நடாத்திய மாந்தை மக்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தோரும் தம் வீடுகளுக்குச் செல்வதும் மடுவுக்கு அன்னையோடு ஒரு சில தினங்களைச் செலவழித்து நிறைவுபெற வருவதுமாகச் செயற்பட்டனர்.

காலப்போக்கில் இச்செய்தி நாலாபக்கங்களும் பரவ தென்பகுதிக் கிறிஸ்தவர்களும் மடுவுக்கு வந்து மடு அன்னையை வணங்கிச் செல்லும் வழக்கம் உருவாகியது. நாளடைவில் மடுப்பிரதேசம் யாத்திரைத்தலம் எனவும், வந்துபோகும் பக்தர்கள் யாத்திரிகர்கள் எனவும் பெயர்பெற்றனர்.

ஒருசில மாதங்களில் அன்னைக்கென களிமண்ணினால் ஓர் சிற்றாலயம் அமைக்கப்பெற்று அன்னையானவள் அவ்வாலயத்தில் வாழ்ந்து வந்தார். தேவைகளுடன் அன்னையை நாடி வந்த பக்தர்களது தேவைகளை நிறைவுசெய்தார் மடு அன்னை. புதுமைகள் ஆயிரக்கணக்கில் இடம்பெற்றன. நோயாளர்களது கொடூர நோய்கள் நீங்கின. பாம்புக்கடி விசத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் நலம் பெற்றனர். பிள்ளைப் பாக்கியமற்றவர்கள் குழந்தைச் செல்வத்தைப்பெற்று பெற்றோராகினர். நாளுக்கு நாள் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றது.

ஏறத்தாள 150 வருடங்களின் பிற்பாடு இவ்வாலயமானது களிமண்ணினாலே சற்று விசாலாமாக்கப்பட்டது. யாத்திரிகர்கள்



வருவதும் போவதுமாக இருந்தனர். குருக்கள் தங்குவதற்கென ஆலயத்தில் பின்புறமாக சிறு அறையும் களிமண்ணினால் கட்டப்பட்டது. மேலும் 50 வருடங்கள் கடந்த பிற்பாடு, அதாவது 1872இல் மடுவுக்கு வருகைதந்த அப்போதைய ஆயர் போன்ஜீன் ஆண்டகை களிமண் குடிசைக் கோவிலின் அவலநிலையைக் கண்டபோது வேதனை அடைந்தார். புதிய ஆலயம் அமைக்கும் திட்டத்தை ஏற்படுத்தி 1872ஆம் ஆண்டு ஆவணி மாதம் 8ஆம் திகதி புதிய ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வினைக் கோலாகலமாகச் செய்தார் என வரலாறு கூறுகின்றது.

கட்டிடப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டு கட்டிடம் முழுமை பெற்ற பிற்பாடு ஆடம்பரமாக ஆலயத் திறப்புவிழா இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. 145 வருடங்களைக் கடந்த ஆலயம் இன்றும் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுவது மகிழ்ச்சியே. ஆலயம் பாவனைக்குட்படுத்தப்பட்டு 40 வருடங்களின் பிற்பாடுதான் ஆலயப் போட்டிக்கோ மண்டபம் கட்டப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

இன்று இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து மக்களும் பாகுபாடற்ற மனநிலையோடு மடுவுக்கு வருவதும் ஒருசில நாட்கள் தங்கி வழிபாடுகளில் பங்கெடுத்து தமது ஆன்மீகத்தைப் புதுப்பித்துக் கொண்டு மீண்டும் அவரவர் வீடுகளுக்குச் செல்வதும் அன்னையின் வழிநடத்தலே.

### 2017ஆம் ஆண்டு ஆவணித் திருவிழா பற்றிய சிறிய கண்ணோட்டம்

கடந்த சில மாதங்களாக மன்னார் பிரதேசத்தில் மழை இல்லாத காரணத்தினால் மக்கள் அவரவர் பங்குகளில் சிறப்பு வழிபாடுகள் செய்து மழைக்காகச் செபித்து வந்தனர். புல்பூண்டுகள் எல்லாம் வெய்யிலின் கொடுமையினால் கருகி காற்றினால் அடித்துச் செல்லப்பட்டன. மிருகங்கள் தண்ணீர்த் தாகத்தின் விளைவாக வாடிவதங்கிப்போயின. கிராமங்களில் உள்ள குளங்கள் எல்லாம் வரண்டுபோயின. வீடுகளில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் நாளுக்குநாள் குறைந்துகொண்டு போயின. இவ்வரட்சிக்கு மடுப்பிரதேசம் விதிவிலக்கல்ல. மடுக்குளத்தின் நீர்மட்டமும் வெகுவாகக் குறைந்தே காணப்பட்டது. இப்படியான சூழலில்தான் மடுதிருத்தலத்தின் ஆவணித் திருவிழா நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகின.

தென்னிலங்கைப் பக்தர்களும் பெருவாரியாக தினமும் வந்துகொண்டிருந்த காட்சியைக் காணமுடிந்தது. குடிப்பதற்கும், குளிப்பதற்கும், ஏனைய தேவைகளுக்கும் தண்ணீர்த்தட்டுப்பாடு வந்துவிடுமோ என்ற ஏக்கம் அனைவர் முகத்திலும் தென்பட்டது. மன்னார் நீர் வழங்கல் சபையின் ஆதரவுடன் பக்தர்களின் அன்றாடத் தேவைகள் நிறைவுசெய்யப்பட்டு வந்தபோதிலும் மக்களின் மனங்களில் சிறு அச்சம் இருந்தது.

எனவே தினமும் வழிபாடுகள் வேளையில் மழைக்காகச் சிறப்பு வேண்டுதல்கள் இடம்பெற்றன. தனிச் செபங்களிலும், குடும்பங்களாகவும், குழுக்களாகவும் செபித்த சந்தர்ப்பங்களிலும் பக்தர்கள் உரத்த குரலில் மழைவேண்டிச் செபித்ததைக் கேட்க முடிந்தது.

கானாவூர்த் திருமண விழாவில் இரசம் தீர்ந்துபோகவே திருமண வீட்டார் மரியன்னையை அன்டிச் சென்று தமது அங்கலாய்ப்புக்களை நம்பிக்கையுடன் அன்னையிடம் கூறினர். மக்களின் அவசியத் தேவையைக் கேட்டறிந்துகொண்ட அன்னை உடனடியாக மகன் இயேசுவிடம் எடுத்துரைத்து மக்களின் அவலநிலையைப் போக்கினாள். அதேபோல் மடுத்திருத்தலத்திலும் மரியாள் பக்தர்களின் விசுவாசம் நிறைந்த செபங்களுக்கு செவிமடுத்து மகன் இயேசுவிடம் விடாப்பிடியாகப் பரிந்துபேசி மழை பொழியச் செய்து யாத்திரிகளது அவலநிலையைப் போக்கினாள்.

எனவே இம்மழையை நாம் இறைவனது ஆசீர்வாதமாகவும் மடு அன்னையின் அருட்பொழிவாகவும் ஏற்று மகிழ்வது அவசியம். பக்தர்கள் வேஸ்ப்பர் தினத்தன்று சிறிதளவான கஸ்டங்களை அனுபவித்தபோதிலும் இம்மழையின் காரணமாக ஏற்பட்ட கஸ்டங்களை இறைவனது ஆசீரோடும் அன்னையின் அருட்பொழிவோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மக்கள் அனுபவித்த கஸ்டங்கள் நீர்குமிழ்கள்போல் மறைந்துபோயின என்று பல பக்தர்கள் எம்மிடம் கூறினர். எனவே எமது நம்பிக்கை நிறைந்த செபத்திற்கு பதில் கொடுத்த இறைத்தந்தைக்கும், எமக்காகப் பரிந்து பேசிய மடு அன்னைக்கும் எமது நன்றிகளைக் கூறிக்கொள்வோம். (தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

‘பல்கலைச் செல்வி இராஜம் புஷ்பவனம் படைப்புக்கள்’ நூல் பற்றிய பார்வை

# ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் இடம்பெறும் மன்னாரைச் சேர்ந்த ஆற்றல்மிக்க பெண் படைப்பாளி

- எழுத்துரு : அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் -

ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் இடம்பெறும் இராஜம் புஷ்பவனம் அவர்கள் 1960களில் மன்னாரில் வாழ்ந்த ஆற்றல் வாய்ந்த ஒரு பெண் கலை இலக்கியப் படைப்பாளி ஆவார். தன்னுடைய பல்துறை சார்ந்த கலை இலக்கியப் படைப்புக்களால் அவர் அன்று தேசிய ரீதியில் நன்கு அறியப்பட்ட ஒருவராக விளங்கினார்.

கவிதை, சிறுகதை, நாடகம், ஓவியம், கட்டுரை, கவியரங்கம், வில்லிசை, வானொலி நிகழ்ச்சிகள், மெல்லிசைப் பாடல்கள், திரைப்பட வசனம், கேலிச்சித்திரம், கைப்பணிகள், தையல் என இவர் பல துறைகளிலும் கால்பதித்தவர். கலை இலக்கியத்துறையில் அவர் கால்பதித்த அனைத்திலும் சிறப்பாக மிளிர்ந்தார்.

கவிஞராக, சிறுகதை ஆசிரியராக, நாடக எழுத்தாளராக, நடிகராக, நடன ஆசிரியராக, வில்லிசைக் கலைஞராக, ஓவியராக, மெல்லிசைப் பாடலாசிரியராக, திரைப்பட வசன கர்த்தாவாக, அரசியல் மேடைப் பேச்சாளராக, பத்திரிகை ஆசிரியராக, கேலிச் சித்திர வரைஞராக, ஒப்பனைக் கலைஞராக, தையல்கலை விற்பன்னராக பல அவதாரங்களை எடுத்து இறவாப் புகழ்படைத்தவர் இராஜம் புஷ்பவனம் அவர்கள். இவருடைய பல்துறைசார்ந்த ஆளுமை எம்மை வியக்கவைக்கிறது. தனது ஐம்பதாவது வயதில் 1994ஆம் ஆண்டு அவர் இறைபதம் அடைந்தார்.

## இவரின் படைப்புக்களில் சில நூலுருப் பெற்றன

கடந்த யூலை மாதம் 22ஆம் திகதி மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருமதி என். இராஜம் புஷ்பவனம் (1944 – 1994) அவர்களின் பல்துறை சார்ந்த படைப்புக்கள் அடங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டது.

***“பல்கலைச்செல்வி இராஜம் புஷ்பவனம் படைப்புக்கள்”*** என்ற மகுடத்தின்கீழ், 223 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் இராஜம் புஷ்பவனம் எழுதிய ஒன்பது சிறுகதைகள், பன்னிரெண்டு கவிதைகள், எட்டு நாடகங்கள், மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நூலை இராஜம் புஷ்பவனம் அவர்களுடைய தங்கையின் கணவர் திருகோணமலையில் வசிக்கும் கவிஞர் ஷெல்லிதாசன் அவர்கள் தொகுத்துள்ளார். இந்நூலில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களை இராஜம் அவர்களின் தங்கை திருமதி நிர்மலாதேவி கோவை நந்தன் (நிம்மி) அவர்கள் தேடிக்கண்டுபிடித்துத் தேர்வு செய்துள்ளார். இந்நூலை இராஜம் அவர்களின் ஒரே மகள் - தற்போது பிரான்ஸ்சில் வசிக்கும் - ஆனந்தரஜனி (ரேவதி மோகன்) அவர்கள் வெளியிட்டுள்ளார்.

இராஜம் புஷ்பவனம் அவர்கள் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்ட சமகாலத்தில் வாழ்ந்த மன்னாரைச் சேர்ந்த கலைவாதி கலீல் அவர்கள் இந்நூலுக்கு ஓர் அறிமுக உரையை வழங்கியுள்ளார். இந்த உரையில் அவர் இராஜம் பற்றிய தன் நினைவுகளை, அவருடனான தன் அனுபவங்களைச் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளார். இராஜம் அவர்களின் சகோதரி திருமதி கனக. பாலதேவி அவர்கள் இராஜம் புஷ்பவனம் பற்றி ஜீவநதி 100வது இதழான ஈழத்துப் பெண் எழுத்தாளர்களின் சிறப்பிதழில் எழுதிய கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் இராஜம் பற்றிய பல தகவல்களை பாலதேவி அவர்கள் தந்துள்ளார்.


அதேபோன்று இராஜம் அவர்களின் கடைசித் தங்கை திருமதி நிர்மலாதேவி (நிம்மி) அவர்களும் தன் சகோதரி பற்றிய தன் நினைவுகளை சிறு கட்டுரையாக இந்நூலில் தந்துள்ளார். நூலின் பின் அட்டையில் திருகோணமலையைச் சேர்ந்த எழுத்தாளர் கலாபுஷ்ணம் நந்தினி சேவியர் அவர்கள் இராஜம் பற்றிய ஓர் அறிமுகக் குறிப்பை வழங்கியுள்ளார். இதில் அவர் இராஜம் அவர்களின் பல்துறை ஆற்றலை சுருக்கமாக விளக்கியுள்ளார்.

## இராஜம் புஷ்பவனம் அவர்களுடைய வாழ்வும் கலை இலக்கிய முயற்சிகளும்

இவருடைய தந்தையார் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர். தாயார் தையல் ஆசிரியை. இவர்களின் மூத்த மகளான இராஜம் புஷ்பவனம் கொழும்பைப் பிறப்பிடமாகக்கொண்டு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் கல்வி பயின்றவர். தந்தையாரின் தொழில் இடமாற்றம் காரணமாக திருகோணமலையிலும் இறுதியாக மன்னாரில் உள்ள அடம்பனிலும் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

கலை இலக்கியப் பின்னணியைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர், சிறுவயதிலேயே எழுத்துத்துறையில் ஆர்வம் காட்டினார். தனது பதினான்கு வயதில் ‘அமவாசைப் பேய்’ என்ற கதையை எழுதியதன் மூலம் இவருடைய இலக்கியப் பிரவேசம் ஆரம்பமானது. தொடர்ந்து வீரகேசரி, தினகரன், உதய சூரியன் போன்ற பத்திரிகைகளில் கவிதை, சிறுகதைகளை எழுதினார். அத்துடன் இலங்கையில் இருந்து அப்பொழுது வெளிவந்த சிற்றிதழ்களான கலைச்செல்வி, கற்பகம், கதிரவன், மலர் போன்றவற்றிலும் கவிதை சிறுகதைகளை எழுதி நாடறிந்த எழுத்தாளராகத் தன்னை வளர்த்துக்கொண்டார்.

சிறந்த நாடக ஆசிரியராக விளங்கிய இவர் மன்னார் பகுதியில் முதன் முதலாக பெண்களை மட்டுமே வைத்து நாடகங்களை நெறியாள்கை செய்து வெற்றிகரமாக மேடையேற்றினார். 1966ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பகுதியில் மாதர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதனூடாக பல கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்றம் செய்தார். இந்நாடகங்களில் அவரும், அவரது தங்கைமாரும், தோழிகளும் நடித்தனர்.




**(இது இராஜம் புஷ்பவனம் அவர்களின் ஆக்கங்கள் அடங்கிய நூல்)**

இவருடைய பல நாடகங்களில் ‘புதையல் கிடைத்தது’, ‘லக்ஸ்பிறே மாப்பிள்ளை’, யவராணி’ போன்ற நாடகங்கள் 20 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மன்னார் மாவட்ட பிரதேச கலா மன்றம் நடாத்திய மேடை நாடகப் போட்டியில் இவரது ‘வீர விஜயனின் வெற்றி’ என்ற நாடகம் வெற்றிபெற்றது. இதைவிட பல சரித்திர, நகைச்சுவை, சமூக நாடகங்கள் போன்றவற்றை மன்னார், அடம்பன் மற்றும் அயல் கிராமங்களில் மேடையேற்றி பலரது பாராட்டைப் பெற்றார். கவிஞர் கலைவாதி கலீல் அவர்கள் இவரது நாடகத்துறை வளர்ச்சிக்கு உதவியாக இருந்து செயலாற்றியமை குறிப்பிடத்தக்கது.

வில்லிசை வேந்தர் லடீஸ் வீரமணி அவர்களிடம் முறைப்படி வில்லிசை கற்று வில்லிசையிலும் தனது திறமையை நன்கு வெளிப்படுத்தினார். கவிஞர் மகாகவியின் பாடல்களுக்கு முக்கியத்துவம் வழங்கி வில்லிசை பொழிந்துவந்தார். மன்னார் பிரதேச கலாமன்றம் நடாத்திய வில்லிசைப் போட்டியில் தனது திறமையைக் காட்டி பாராட்டைப் பெற்றுக்கொண்டார். மாஸ்ரர் சிவலிங்கத்துடனும் இவர் வில்லிசையில் இணைந்து பணியாற்றினார். இவர் வில்லிசையின்பால் கொண்ட தீவிர ஈடுபாட்டால் பிற்காலத்தில் ‘வில் பிறந்த கதை’ எனும் நூலை எழுதி கொழும்பில் வெளியிட்டார்.

ஆடற்கலை தொடர்பான இவருடைய ஈடுபாடும் சிறப்பாக இருந்தது. மன்னார் மாவட்டத்தில் பின்னல் கோலாட்டத்தை அறிமுகப்படுத்தியவராக இவர் அறியப்படுகின்றார். கோலாட்டம், கும்மி, ஒயிலாட்டம், சிரட்டைக் கும்மி, கிராமிய நடனங்கள், தனி நடனங்கள், குழு நடனங்கள் போன்றவற்றை சிறப்பாக நெறியாள்கை செய்து மேடையேற்றினார்.

கவிதைத் துறையிலும் இவர் ஆழமாகக் கால்பதித்திருந்தார். சந்தம் மற்றும் எதுகை மோனையுடன் கூடிய கவிதைகள் பலவற்றை எழுதினார். கவியரங்குகளிலும் பங்குபற்றி ஆற்றல் வாய்ந்த கவிஞராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

இவர் அரசியல்துறைப் பேச்சாளராகவும் விளங்கினார். 1967, 1968ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் மன்னார் மாவட்டத்தின் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. அழகக்கோன் அவர்களின் அரசியல் மேடைப் பேச்சாளராக இவர் செயற்பட்டார்.

இவர் பத்திரிகைத் துறையிலும் பணியாற்றினார். 1972 – 1979 வரையான காலகட்டத்தில் அன்றைய அமைச்சர் டட்லி சேனாநாயக்கா அவர்களின் ‘பொதுஜனஹண்ட’ என்ற சிங்களப் பத்திரிகையின் தமிழ் மொழிப் பிரிவில் ‘மக்கள் குரல்’ என்ற பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

கார்ட்டூன் எனப்படும் கேலிச்சித்திரங்களை வரைவதிலும் இவர் ஆர்வம் காட்டினார். அக்காலகட்டத்தில் வீரகேசரி பத்திரிகை பல கேலிச்சித்திரங்களைப் பிரசுரித்து வந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவரும் பல கேலிச் சித்திரங்களைத் தீட்டி தனது கலை ஆர்வத்தை வளர்த்துக்கொண்டார்.

வானொலி நிகழ்ச்சிகள் பலவற்றிலும் இவர் பங்கெடுத்தார். அக்காலத்தில் இலங்கை வானொலியானது சிறுவர்களை, இளையோர்களை கலை இலக்கிய ரீதியில் ஊக்குவிப்பதில் முனைப்புடன் செயற்பட்டது. சிறுவர் மலர், இளைஞர் மன்றம் போன்ற நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி பலரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அவ்வேளை வானொலி அண்ணாவாக பெயர்பெற்ற திரு. வ. இராசையா அவர்களால் இராஜம் இனங்காணப்பட்டார். பிரபல அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத் போன்றவர்களுடன் வானொலி நாடகங்கள், சஞ்சிகை நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்கெடுத்தார். சிறுவர் மலர், இளைஞர் மன்றம் ஆகியவற்றில் அறிமுகமான இவர், வாலிபர் வட்டம், விவேக சக்கரம் போன்ற நிகழ்ச்சிகளில் தொடர்ச்சியாகப் பங்களிப்புச் செய்துவந்தார். இளைஞர் மன்றத்தின் ஊடாக தன்னுடைய இலக்கிய ஈடுபாட்டை சிறப்பாக வளர்த்துக்கொண்டார். வானொலியின் வர்த்தக சேவையில் பெண்கள் பகுதியிலும் மற்றும் ஒலி மஞ்சரிப் பகுதியிலும் தன் பங்களிப்பை வழங்கிவந்தார். கால ஓட்டத்தில் இவர் வானொலிக்கு பல சிறுவர் நாடகங்களையும் மற்றும் இலக்கிய, சமூக, விஞ்ஞான, சமய சார்பான பல நாடகங்களையும் தொடர்ந்து எழுதினார். பல மெல்லிசைப் பாடல்களையும் வானொலிக்கென எழுதினார்.

சினிமாத்துறையிலும் இவர் கால்பதித்திருந்தார். 1975இல் தயாரிப்பாளர் ஹென்றிசந்திவன்ச அவர்களின் தயாரிப்பில் உருவான ‘வனகத்து கெல்ல’ என்ற திரைப்படத்தினை தமிழ் மொழியில் ‘சுமதி எங்கே?’ என்ற பெயரில் இவர் தயாரித்து வெளியிட்டார். இத்திரைப்படத்தின் வசனத்தையும் பாடல்களையும் இவரே எழுதினார். ‘ஹாரலக்‘ய’ என்ற படத்தையும் தமிழில் மொழிபெயர்ப்பு (டப்பிங்) செய்ய இவர் பங்களிப்புச் செய்ததாக அறியப்படுகிறது.

ஆன்மீகத்திலும், ஓவியத் துறையிலும் குறிப்பிடத்தக்க அறிவு நிரம்பியவராக விளங்கினார். இவரது பல ஓவியங்கள் மன்னார் மாவட்டத்தின் சிறந்த ஓவியமாகத் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்களை பெற்றுக்கொண்டன.

இவர் ஒப்பனைக் கலைஞராகவும் விளங்கினார். தனது நாடகங்களுக்கு தானே ஒப்பனைகளையும் செய்தார். கலைத்திறன் வாய்ந்த இவர் தன் கைப்படவே முகவடிவங்களைச் செய்து சிங்கம் முயல் போன்ற நாடகங்களை மேடையேற்றினார். கடற்கரைச் சிற்பி, சங்கு போன்றவற்றைக்கொண்டு அழகிய வடிவங்களைச் செய்கின்ற கைவினைக் கலைஞராகவும் திகழ்ந்தார்.

இவ்வாறு பல்துறை ஆற்றல் வாய்ந்த ஒரு கலை இலக்கியப் படைப்பாளியாக விளங்கிய திருமதி என். இராஜம் புஷ்பவனம் அவர்களின் படைப்புக்கள் பல காலவெள்ளத்தில் காணாமல் போய்விட்டமை கவலைக்குரியதே. ஆயினும் அவற்றில் ஒருசிலவற்றை அவரது குடும்பத்தினர் தேடியெடுத்து நூலுருவாக்கியமை பாராட்டுக்குரியது. இன்னும் ஆங்காங்கே மறைந்தும் ஒளிந்தும் கிடக்கும் அவரது கலை இலக்கிய ஆக்கங்களை நூல் வடிவத்திற்குக் கொண்டுவர அவரது குடும்பத்தினரும், நண்பர்களும் கலை இலக்கிய ஆர்வலர்களும் முன்வரவேண்டும். இன்னும் அவருடைய வாழ்வு, கலை இலக்கிய முயற்சிகள் பற்றிய விரிவான நூல் ஒன்றையும் வெளியிட முயற்சிக்க வேண்டும்.

---

**திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட்**

# அகவை அறுபதில் மணி விழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும்



மன்னார் மாவட்டத்திலே மங்காப் பெருமையுடன் மருதமும் நெய்தலும் வளங்கொளிக்கும் வங்கம் தங்கும் வங்காலைப் பதியதனில் திரு. திருமதி சூசையப்பு பீரீஸ் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வி திருமதி பெப்பி பெப்பற்றுவா மதுரநாயகி விக்டர் லெம்பேட் அவர்கள் அகவை அறுபதில் பணி ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் மன்னார் கல்வி வலயத்தில் தமிழ்மொழிப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக கடந்த 08 வருடங்கள் அரும்பணியாற்றி மன்னார் மாவட்டத்தின் O/L, A/L பெறுபேறுகளை உயர்மட்டத்திற்கு கொண்டுசென்று சாதனை படைத்துள்ளார்.

இவர் தனது ஆரம்பக்கல்வி, உயர்தரக்கல்வி இரண்டினையும் மன்/ புனித ஆனாள் ம.ம.வி. லும் கலைமாணி, முதுமாணிப் பட்டங்களை யாழ். பல்கலைக்கழகத்திலும் கற்றுத் தேறினார். 1984இல் ஆசிரியராக நியமனம் பெற்று 15 வருடங்கள் ஆசிரியராகவும் 11 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் 08 வருடங்கள் தமிழ்ப்பாட உதவிக்கல்விப்பணிப்பாளராகவும் கல்விப்பணி புரிந்துள்ளார். மேலும் யுத்த காலங்களில் மிகவும் சிரமப்பட்டு தனது பணியினை முன்னெடுத்துச் சென்றார். வடமாகாணத்தில் மன்னார் வலயம் தமிழ்ப்பாடப் பெறுபேற்றில் உயர்ந்து நிற்பதற்கு வழிகாட்டியவர். மேலும் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் மன்னார் வலயம் முதலிடங்களைப்பெற்று தேசிய மட்டத்திலும் வெற்றிகனிகளைப் பறிப்பதற்கு உதவினார்.

இவர் சிறந்த ஆளுமையும் தன்னம்பிக்கையும் கொண்டவர். பெண் தலைமைத்துவத்திற்கு சிறப்பான எடுத்துக் காட்டாவார். இவர் பல்பரிமாணங்கொண்ட பல பணிகளை ஆற்றியுள்ளார். இதுவரை 05 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

01. பழமொழித் தொகுப்பு
02. வட்டார வழக்கு
03. தமிழுக்கு வளம் சேர்க்கும் நாட்டார் பாடல்கள்
04. தமிழறிவு வினாவிடை (1000)
05. வரலாற்றில் தடம் பதித்த வங்கக் கலைஞர்கள்

இந்நூல்கள் எமது தண்தமிழுக்கு வளம் சேர்க்கும் வகையில் அமைந்தவை. இவரது பணி தமிழ்மொழிப்பாடத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. வங்காலைப் பங்கின் மறையாசிரியராக, வழிபாட்டுக்குழு உறுப்பினராக, கடந்த வருடத்தில் மேய்ப்புப்பணி சபை உறுப்பினராக எனப் பல பணிகளை ஆற்றிவருகின்றார். செபவாழ்வு, அர்ப்பணிப்பு, கருதிய கருமத்தை உடனுக்குடன் செய்யும் திறன், சிறப்பான பேச்சாற்றல் போன்ற சிறப்பான ஆளுமைகளைக் கொண்டவராக இவர் விளங்குகிறார்.

இவர் ஓய்வு பெறுவது மன்னார் கல்வி வலயத்திற்குப் பேரிழப்பாகும். இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளும் ஆன்ம பலனும், உடல் உள சுகமும் அளித்து மேலும் இவரது பணிகள் மானிட நலனுக்கு உதவ வேண்டி வாழ்த்துகின்றோம்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 67

# வீண் விவாதங்களையும் வியாக்கியானங்களையும் விட்டுவிட்டு செயலில் இறங்கவேண்டும் !

### *மதிப்புக்குரியவர்கள்!*

வீரமிக்க மனோபலம், அன்பு நிறைந்த வாழ்க்கை, விருந்தோம்பி வாழ்தல், வருவோர்க்கு வாரிவழங்கும் குணம், பண்பட்ட அணுகுமுறைகள், உயர்ந்த ஆன்மீக மதிப்பீடுகள் போன்ற உயரிய பண்பாட்டைக்கொண்ட ஒரு மக்கள் குழுமமாக தமிழர்கள் காலம் காலமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். தம் உரிமைகளுக்காகப் போராடும் இனத்தவர்களையும்போல தமிழர்களும் தமது உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் ஆயுதமுனையிலும் போராடி வந்திருக்கின்றார்கள். தவறுகள் செய்யாத, குற்றங்கள் புரியாத இராணுவ அமைப்புக்களையோ போராட்டக் குழுக்களையோ எங்கும் காணமுடியாது. அவ்வகையில் அகிம்சை வழிமுறைகள் தோற்றுப்போனதை உணர்ந்துகொண்டு ஈழத்தில் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் மேற்கூறப்பட்ட கூற்றுக்கு விதிவிலக்கானது அல்ல!

ஆயினும், இவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு, சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தல், கல்விச் செயற்பாடுகள், அபிவிருத்திச் செயற்திட்டங்கள், தூர நோக்குடன் செயற்பட்ட விதங்கள் எல்லாம் மக்கள் மத்தியில் பெரும் மதிப்புக்கும் பிரமிப்புக்கும் உரியதாய் இன்றும் இருக்கின்றது. அதிலும் இவர்களின் மனிதநேய செயற்பாடுகள் எந்தளவிற்கு அவர்கள் எதிரிகள் மட்டில் மனிதநேயத்தை மதித்தார்கள் என்பதை இவர்களின் பல சம்பவங்கள் எடுத்துக்கூறும். இவர்களின் மனிதநேயத்திற்குச் சான்றுபகரும் உண்மைச் சம்பவம் ஒன்றை நோக்கலாம்.

### *கல்லிலும் ஈரம் உண்டு*

திருமணமான சில மாதங்களில் போருக்கு வந்த ஒரு சிங்களச் சிப்பாய் விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடிக்கப்படுகின்றான். கைதுசெய்யப்பட்ட அவ்வீரன் இவர்களின் சிறையில் சில ஆண்டுகள் இருந்தபோது அவன் தன்னுடைய இளம் மனைவியைச் சந்திக்க வேண்டும் என்று தனது பொறுப்பாளருக்குக் கடிதம் எழுதுகின்றான். அக்கடிதம் தலைமைப்பீடம் செல்கின்றது. இவர்களின் தலைவரிடமிருந்து அதற்கு அனுமதி கிடைக்கின்றது. குறிப்பிட்ட ஒரு நாளில் அச்சிங்கள சிப்பாயின் மனைவி அனுராதபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கு வருகின்றாள். கணவனை நீண்ட காலத்தின் பின் சந்தித்ததால் அவள் மிக மகிழ்ச்சி கொள்கின்றாள். பிற்பகல் அவள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லமுடியாத களநிலமை உருவாகின்றது.

### *பெண்களைப் புனிதமாகப் போற்றியவர்கள்*

இவளை என்ன செய்வது? ஒரு பெண்ணை அதுவும் சிங்கள இனத்தை சார்ந்த சிறையிலிருக்கும் ஒரு இராணுவச் சிப்பாயின் மனைவியை எங்கு தங்கவைப்பது? என்று பொறுப்பாளர்கள் சிந்திக்கின்றார்கள். தகவல் தலைமைக்கு செல்கின்றது. அப்பெண் தனக்கு எவ்விடம் பாதுகாப்பானது என்று கருதுகின்றாளோ அவ்விடத்தில் தங்க வைக்கப்படட்டும் என்ற உத்தரவு மேலிடத்தில் இருந்து கிடைக்கின்றது. அப்பெண் தன் கணவனுடன் தங்க விரும்புகின்றாள். அவளின் விருப்பப்படியே கணவனும் மனைவியும் தங்கவைக்கப்படுகின்றார்கள். மறுநாள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சென்று தன் உறவினர்களுடன் இணைந்து கொள்கின்றாள் அவள்.

ஆனால், மூன்று மாதத்திற்குப் பிறகு புலிகளின் தலைமைக்கு ஒரு கடிதம் வருகின்றது. அதில், தான் கணவனை சந்திக்க வந்தபோது மனிதாபிமானத்துடன் நடந்துகொண்டமைக்கு நன்றி தெரிவித்து எழுதியிருக்கின்றாள். கூடவே தான் கருவுற்று இருப்பதாகவும், ஆனால் இக்கரு எப்படி உருவானது என்று உறவினர்கள், அயலவர்கள் கேட்டால் தான் என்ன சொல்வது, தானும் தன் கணவனும் சேர்ந்து இருந்ததால்தான் இக்கரு உருவானது என்றால் தான் வாழும் சமூகம் நம்பாது! இதனால், தான் நடத்தை கெட்டவளாக பார்க்கப்படலாம் என்று பயப்படுவதாக விபரித்து அக்கடிதத்தினை எழுதுகின்றாள்.

இப்பெண்ணுக்கு ஏற்பட்டிருக்கும் இந்நிலை சாதாரணமானதல்ல. இதனைத் தீர்க்க முடிவு செய்த தலைமைப்பீடம் மீண்டும் அப்பெண்ணுக்கு கடிதம் எழுதுகின்றது. அக்கடிதத்தில் அவளையும் அவளது மாமியார் மற்றும் அவர்கள் ஊரின் பௌத்த மதகுரு மூவரையும் குறிப்பிட்ட ஒருநாளில் கிளிநொச்சிக்கு வரும்படி குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

### *அவர்கள்களின் மனிதாபிமானத்திற்கு இது ஒரு மாதிரியே!*

அதன்படி கிளிநொச்சிக்கு வந்தடைந்த அம்மூவரையும் அழைத்து சென்று அச்சிங்கள சிப்பாயிடம் விடுகிறார்கள். தாங்கள் இருவரும் ஒருநாள் இரவு சேர்ந்திருந்தது உண்மை என்றும் தன்னுடைய மனைவியின் வயிற்றில் வளரும் கரு தன்னுடையதுதான் என்றும் தன் தாயிடமும், மதகுருவிடமும் சொல்கின்றான் அச்சிங்களச் சிப்பாய். தன் கணவன், மாமியார், மதகுரு ஆகிய மூவரும் தன்நிலையை விளங்கிக்கொள்ளலாம். ஆனால், ஊரில் உள்ளவர்கள் எப்படியும் தன்னுடைய நடத்தையைத் தவறான கண்ணோட்டத்தில்தான் பார்ப்பார்கள்




என அச்சிங்களப் பெண் கண்ணீரோடு தன் நிலையை விபரிக்கின்றாள். உடனடியாகவே, அச்சிங்கள பெண்ணின் கற்புக்கு களங்கம் ஏற்படாமல் இருப்பதற்காக அச்சிப்பாயை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய்கின்றது புலிகளின் தலைமைப் பீடம்!

### *காலம் அறிந்து கருத்துக்களை முன்வைக்க வேண்டும்*

'இராணுவத்தில் இருந்து விலகியவர்கள் தெற்கில் எவ்வாறு குற்றங்களைப் புரிகிறார்களோ அதேபோன்று போர்ப் பயிற்சி பெற்றவர்கள் வடக்கிலும் அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட வாய்ப்பிருக்கின்றது' என வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் 2017 ஆனி மாதத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள் போன்ற குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட உரையாடலில் தெரிவித்திருக்கின்றார். முதலமைச்சரின் மேற்சொன்ன கூற்று பலத்த சர்ச்சையை பல திறத்தாரிடமிருந்தும் எழச் செய்திருக்கின்றது.

முதலமைச்சரின் கூற்றில் ஒருவகைச் சாத்தியக்கூறுகள் இருப்பினும் ஒருசிலரின் நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்தமாக அவர் போர்ப் பயிற்சிபெற்ற எல்லாரையும் குறிப்பிடாவிட்டாலும் பொதுவான ஒரு கூற்றினை மேற்சொன்னவாறு தெரிவிப்பது இன்றைய சூழலில் ஆரோக்கியமானது அல்ல என்றே தெரிகின்றது. ஏனெனில் வடக்குக் கிழக்கு மாகாணங்களை இராணுவ ஆக்கிரமிப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் ஆட்சியாளர்களின் தணியாத தாகம். அதற்கு இக்கூற்று மிகப்பொருத்தமான சான்றாகிவிடும் என்பதையும் முதலமைச்சர் இப்பேர்ப்பட்ட கூற்றுக்களைத் தெரிவிப்பதற்குமுன் சிந்திக்க வேண்டும்.

### *வட மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவரின் கருத்து கவனிப்புக்குரியது*

"ஏழு இலட்சம் மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் ஒருசில நபர்களின் வன்முறைச் செயற்பாட்டை வைத்துக்கொண்டு யாழ்ப்பாண மக்கள் வன்முறையை நோக்கிச் செல்கிறார்கள் எனத் தெற்கில் பரப்புரை முடுக்கிவிடப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களில் 12 ஆயிரம் பேர் மறுவாழ்வு பெற்றிருந்தனர். அவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரின் செயற்பாட்டை வைத்துக்கொண்டு முன்னாள் போராளிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் அரச தரப்பிலிருந்து கருத்துக்கள் வெளிவந்துள்ளமை கண்டிக்கத்தக்க விடயமாகும். வன்முறைச் செயற்பாடுகள் இளைஞர்களின் விரக்தி நிலையின் விளைவேயொழிய அவர்களில் ஒருசிலர் முன்னாள் போராளிகள் என்பதற்காக எல்லா முன்னாள் போராளிகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதையோ, அவர்களைப் புண்படுத்தும் முகமாகக் கருத்துக்களை வெளியிவதையோ அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், இது சும்மா இருப்பவர்களையும் தூண்டும் செயலாகவும் அமைந்துவிடும்.

மூத்த பொலிஸ்மா அதிபர்கள் மூவர்மீது பெரியளவிலான குற்றங்கள் சுமத்தப்பட்டு ஒருவர் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். இன்னொருவர் விளக்க மறியலிலிருந்து பிணையில் நிற்கின்றார். மற்றையவர் விளக்கமறியலில் உள்ளார். இவர்களின் செயற்பாட்டுக்காக முழுப் பொலிஸ் திணைக்களத்துக்கே அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளிட முடியுமா?" என்ற மிக நியாயபூர்வமான - சரிநிகரான - யாதார்த்தமான கருத்தை மிக ஆணித்தரமாக 04.08.2017அன்று ஊடகங்களுக்கு வழங்கிய தமது செய்திக்குறிப்பில் முன்வைத்துள்ளார் வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சி. தவராசா அவர்கள்.

### *நினைத்தால் முடிக்கலாம்!*

பெரும் பெரும் குற்றங்களை இழைப்பவர்களின் கொடுக்குகளை உடைப்பது காவல்த்துறையினருக்கு ஒன்றும் பெரிய விடயமல்ல. பொலிஸ் நினைத்தால் - உழைத்தால் இதனைச் செய்து முடித்துவிடலாம். (வீதிப் போக்குவரத்து பொலிசாரின் உழைப்பைக் குறிப்பிடவில்லை!) அதற்கு அண்மைக்கால உதாரணம்; கொக்குவில்லில் இரு பொலிஸ்சாரை வாளால் வெட்டிய நபர்களை ஓரிரு வார காலப்பகுதியிலேயே கைதுசெய்து விசாரணைகளையும் முன்னெடுத்ததைக் குறிப்பிடலாம். ஆனால், கொக்குவில் வாள்வெட்டுச் சம்பவத்துடன் சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை பிடித்ததுபோல பொலிஸ் வினைத்திறனுடன் தொடர்ந்து செயற்படுமா, செயற்படுகின்றதா என்பதுதான் சுனாமியாக எழுந்து நிற்கும் கேள்வி! ஆகக்குறைந்தது மணல் கடத்தலுக்கும் மரக்கடத்தலுக்கும் பணம்பெற்று அக்குற்றச் செயல்களைப் பொறுத்த மட்டில் பார்த்தும் பாராது இருந்துவிட்டு மணலாலும் மரத்தாலும் பணம் பெருக்கும் முதலைகள் பெருகியதும் அக்கும்பலைக் கட்டுப்படுத்த முயற்சித்தால் கடந்தகால சூட்டுச் சம்பவங்களைப் போன்ற நிகழ்வுகளைத்தான் காவல்துறையினர் சந்திக்கவேண்டி வரும்!

எனவே, காவல்த்துறையினர் இவ்விடயத்தில் மிக நேர்த்தியாக – வினைத்திறனோடு விழிப்போடு செயற்படுவது கடந்த நாள்களில் நடந்த குற்றச்செயல்கள் போன்ற தீச்செயல்கள் பெருகாமல் இருக்க வாய்ப்பளிக்கும். பொலிஸாரின் செயற்பாடு தொட்டிலை ஆட்டுவதும் பிள்ளையைக் கிள்ளிவிடுவதுமாக இருந்தால் பிள்ளைக்குத் (சமூகத்திற்கு) தொடர்ந்து துன்பமும் துயரமும் தொல்லையும்தான் மிஞ்சும்!

### *நல்லூரில் நடந்ததென்ன?*

நல்லூரில் 22.07.2017 அன்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி உயர்திரு மா. இளஞ்செழியன்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒரு தற்செயலான செயல் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறியிருக்கும் நிலையில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் அத்துப்பாக்கிச் சூட்டின் இலக்குத்தானே என மீண்டும் உறுதிபடக் கூறியிருக்கிறார். இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த நீதிபதியின் மெய்ப் பாதுகாவலர் திரு. ஹெமச்சந்திரவின் இறுதிச் சடங்கு 27.07.2017அன்று சிலாபத்தில் நடைபெற்றிருக்கிறது. இவ் இறுதிச் சடங்கின் நிறைவில் செய்தியாளர்களிடம் பேசும்போது இக்கொலை முயற்சியின் இலக்குத்தானே எனப் பகிரங்கமாக தெரிவித்திருக்கிறார் நீதிபதி.

இத்தாக்குதல்பற்றிய முதல் சாட்சி தான் என்றும் இத்தாக்குதல் குறித்த முழு விபரத்தையும் மிக துல்லியமாகத் தெரிவித்திருக்கும் நீதிபதி தாக்குதலாளி சுட்டபோது தனக்குக் காயமேற்படாததற்குக் காரணம் தாக்குதலை நடத்தியவரால் தன்னை இலகுவாக இலக்குவைக்க முடியவில்லை என்றும் தனக்கும் அவருக்கும் இடையே உப பரிசோதகர் இருந்ததாகவும் தன் பின்னால் மற்றைய பொலிஸ் கான்ஸ்டபின் நின்றிருந்தார் அதனால் விபரீதம் தவிர்க்கப்பட்டதாகவும் விபரித்திருக்கிறார்.

### *நீதிபதிக்கு நீதி கிடைக்குமா?*

"...இப்படி இச்சூட்டுச் சம்பவம் இருக்கையில் இதன் இலக்கு யார் என்பதைப்பற்றி இவர்கள் ஏன் தேடிக்கொண்டிருக்கிறார்கள்? யாரையாவது திருப்திப்படுத்துவதற்காக இவர்கள் இப்படிச் செய்கிறார்களா என்பதுபற்றி எனக்குத் தெரியவில்லை!" என மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தன்மீது மேற்கொள்ளப்பட்ட சூட்டுச் சம்பவம்பற்றி மேலும் ஆதங்கத்தோடு கூறியிருக்கின்றார்.

வடமாகாண ஆளுநர் றெஜினோல் குரே 29.07.2017அன்று மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது நல்லூரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனே அதன் இலக்கு எனக் குறிப்பிட்டிருப்பதும் இங்கு கவனத்திற்குரியது.

இச்சம்பவத்தை அவதானிக்கின்றபோது சுடப்பட்டு ஒருவர் செத்துப்போய் எல்லாம் முடிந்த பின்னர்தான் 'இன்னார் (உயிரிழந்தவரின் பெயர்) மீதுதான் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. 'இன்னார்'தான் இச்சம்பவத்தில் உயிரிழந்தார்' என காவல்த்துறையினர் உறுதிப் படுத்துவார்கள்போல தெரிகிறது (ஒரு அசம்பாவிதம் நடந்ததும் வழமைபோன்று பொலிஸ் உடன் வருவதில்லைத்தானே!). என்ன காவல்த்துறை ஐயா நீங்கள்? சாதாரண பொதுமகனு(ளு)க்கு விளங்குவதுகூட உங்களுக்குப் புரியவில்லை என்றால் உங்களால் எங்களுக்கு வேறு எதனைத்தான் செய்யமுடியும் என்ற கேள்வியைத்தான் பொதுமக்கள் காவல்துறையினரை நோக்கி எழுப்பிய வண்ணமாக இருக்கின்றார்கள்.

ஒரு மேல் நீதிமன்ற நீதிபதியைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் உண்மை நிலையே இதுவரையில் இன்னும் வெளிப்படுத்தப்படாத நிலை நிலவினால் எவ்வாறு பொதுமக்கள் பொலிஸின் செயற்பாடுகளில் நம்பிக்கைகொள்வார்கள் என்பதையும் மிகச் 'சீரியஸ்' ஆக காவல்த்துறையினர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### *வட மாகாணசபை முன்னாள் போராளிகளுக்கு இதுவரையில் என்ன செய்திருக்கின்றது?*

சுமார் 12,000 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிகின்றது. இவர்களை ஒன்றிணைத்து மாவட்ட மட்டங்களில் அல்லது வயதடிப்படையில் அல்லது அவயவங்கள் இழந்தவர்கள் அல்லது முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது குடும்பத்தலைவர்கள் அல்லது குடும்பத்தலைவிகள் அல்லது குழுப்பிரதிநிதிகள் அல்லது வேறு ஏதாவது ஒரு அடிப்படையில் சந்திப்புக்களோ அன்றேல் ஒன்றுகூடல்களோ ஒழுங்காக - கிரமமாகச் செய்யப்பட்டிருக்கின்றதா? வட மாகாணசபை இவர்கள் மட்டில் இவ்வாறான தொடர் முயற்சியை இதுவரையில் அனைவருக்கும் மேற்கொண்டிருக்கின்றதா? அங்காங்கே சில மாகாணசபை உறுப்பினர்கள் சில துவிச்சக்கர வண்டிகளையும் சிறுசிறு வாழ்வாதாரங்களையும் உபகரணங்களையும் வழங்கிவிட்டு பெரும் செய்திக்குறிப்பாக வெளியிடுகிறார்களே தவிர இவர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் வேலைத்திட்டங்கள் வட மாகாணசபையால் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான் வெளிப்படையான – அப்பட்டமான உண்மை.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# பணத்தாசை கொண்ட அருள்பணியாளரை மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள்

## திருத்தந்தை பிரான்சிஸ்

கிறிஸ்தவ எளிமை இறைவன் தரும் ஒரு வரம் என்றும், பணத்தின்மீது பற்றுதல் கொண்டுள்ள அருள்பணியாளரை மக்கள் மன்னிக்கமாட்டார்கள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த வாரம் வழங்கிய மறையுரையில் கூறினார்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் எருசலேம் கோவிலில் விற்பனை செய்தோரையும், பணம் மாற்றியோரையும் இயேசு விரட்டியடித்த நற்செய்திப் பகுதியை மையமாக வைத்து திருத்தந்தை தன் மறையுரையை வழங்கினார்.

இறையரசைக் குலைப்பதற்காக ஊன்றப்பட்ட விதை பணம் என்று கூறிய திருத்தந்தை, பணத்தை 'எதிர்க் கிறிஸ்து' அல்லது 'எதிர்க் கடவுள்' என்று கூறுவது பொருத்தம் என்றும், பொய்த்தெய்வ வழிபாட்டை மேற்கொள்வோரின் உள்ளங்களில் பணமே வீற்றிருக்கிறது என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

இறைவன் வாழும் இல்லங்களில் பணம் நுழையும்போது அங்கிருந்து இறைவன் வெளியேற்றப்படுகிறார் என்றும் தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பணத்தைக் கோவிலுக்குள் நுழைக்கும் அருள்பணியாளர்கள், இறைவனின் இல்லத்தை பாழடையச் செய்வர் என்ற எச்சரிக்கை விடுத்தார்.

அருள்பணியாளர்களிடம் விளங்கும் நல்லவற்றைப் போற்றிக் கொண்டாடும் விசுவாசிகள், அவரிடம் பணப்பற்று என்ற நாற்றம் அடிப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் தன் மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் தெளிவுபடுத்தினார்.



# நம்பிக்கையற்ற தண்டனைகள் வெறும் சித்திரவதைகளாக மாறிவிடும்

## - திருத்தந்தை -

எந்த ஒரு தண்டனையும் நம்பிக்கை என்ற தொடுவானத்தைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். நம்பிக்கையற்ற தண்டனைகள் வெறும் சித்திரவதைகளாக மாறிவிடும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அர்ஜென்டீனா நாட்டு இளையோருக்கு அனுப்பிய ஒரு காணொளிச் செய்தியில் கூறியுள்ளார்.

இளவயதில் குற்றங்கள் புரிந்து சிறைவைக்கப்பட்டிருப்போருக்கு அர்ஜென்டீனா நாட்டின் புவெனஸ் அயிரஸ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள எஸெயிஸா (Ezeiza) மையம் என்ற சீர்திருத்தப்பள்ளி மாணவருக்கு திருத்தந்தை கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி மாலை காணொளிச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

இசை உட்பட பல்வேறு குணமளிக்கும் வழிகளில், இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்த முயலும் இந்த மையத்தின் முயற்சிகளைத் தான் பாராட்டுவதாகத் திருத்தந்தை இஸ்பானிய மொழியில் வழங்கியுள்ள இச்செய்தியில் கூறியுள்ளார்.

இப்பள்ளியில் மேற்கொள்ளப்படும் கல்வி வழியே, இளையோர் மீண்டும் சமுதாயத்தில் தங்கள் வாழ்வைத் தொடர முடியும் என்ற நம்பிக்கையை இந்த மையம் வழங்குவதோடு, இசை போன்ற கலைவடிவங்கள் வழியே, இளையோரின் மனங்களை மேன்மைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு திருத்தந்தை தன் பாராட்டுக்களைக் கூறியுள்ளார்.

சீர்திருத்தப் பள்ளியிலிருந்து வெளியேறும் இளையோர், மீண்டும் பிரச்சினைகளை சந்திப்பது நிச்சயம் என்றாலும் அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்டுள்ள நம்பிக்கை, பிரச்சினைகளை எதிர்கொள்ள சக்தி தரும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தக் காணொளிச் செய்தியில் கூறியுள்ளார்.

பள்ளியில் பயிலும் இளையோர் அனைவரையும் தன் உள்ளத்திற்கு நெருக்கமாக வைத்து, அவர்களுக்காகச் செபிப்பதாகக் கூறியுள்ள திருத்தந்தை, அவர்களை மீண்டும் சந்திக்கும்வரை, புன்முறுவலோடு அவர்களைக் காண விழைவதாகக் கூறி, தன் காணொளிச் செய்தியை நிறைவு செய்துள்ளார்.

# துன்புறுவோரிடம் இயேசு பிரசன்னமாகியிருக்கிறார்

கட்டாயத்தின் பேரில் காணாமற்போக வைக்கப்படும் மக்களை நினைவுகூரும் உலக நாள் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் துன்புறும் மக்களை மையப்படுத்தி தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ளார்.

"அவரைப்போல இன்று துன்புறும் பல சகோதர சகோதரிகளிடம் இயேசு பிரசன்னமாகியிருக்கிறார்" என்ற வார்த்தைகள் திருத்தந்தையின் டுவீட்டர் செய்தியில் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளன.

மக்களிடையே அச்சத்தை உருவாக்கும் நோக்கத்துடன் எவ்வித தடயமும் இன்றி தனி மனிதர்களைக் காணாமற்போகச் செய்யும் கொடுமைகளை அரசு உட்பட பல அமைப்புக்கள் மேற்கொள்வதை கண்டித்து ஐ.நா. அவை 2010ஆம் ஆண்டு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத்தீர்மானத்தின் விளைவாக 2011ஆம் ஆண்டு முதல் ஓகஸ்ட் 30ஆம் திகதி கட்டாயத்தின் பேரில் காணாமற்போக வைக்கப்படும் மக்களை நினைவுகூரும் உலக நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

# கணனியில் அன்னை தெரேசா பற்றிய நூல்



அன்னை தெரேசா புனிதராக அறிவிக்கப்பட்டு ஓராண்டு நிறைவுறுவதையொட்டியும், அவர் இறையடி சேர்ந்து 20 ஆண்டுகள் நிறைவுறுவதையொட்டியும், அன்னை தெரேசா குறித்து கணனி வழி வாசிக்க உதவும் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

செப்ரம்பர் மாதம் 4ஆம் திகதி அன்னை தெரேசா, புனிதராக உயர்த்தப்பட்டதன் ஓராண்டு நிறைவும், செப்ரம்பர் 5ஆம் திகதி அன்னை தெரேசா இறந்ததன் 20ஆம் ஆண்டு நிறைவும் நினைவு கூரப்படுவதையொட்டி, 'அன்பு கூரப்படாதவர்களை நாம் அன்பு கூர்வோம்' என்ற தலைப்பில் கணனி வழி பயன்பாட்டிற்கான டிஜிட்டல் நூல் ஒன்று வெளியிடப்பட்டது.

கடந்த ஆண்டு யூலை மாதம் 22ஆம் திகதி திருத்தந்தையின் முன்னுரையுடன் வெளியிடப்பட்ட இந்நூல் தற்போது டிஜிட்டல் வடிவில் வெளியிடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மடுப்பதியில் பொழிந்த பெருமழை ....

6ஆம் பக்கத் தொடர்ச்சி

திருநாள் அன்று காலை கருதினால் உட்பட ஏழு ஆயர்கள் மற்றும் 150க்கும் மேற்பட்ட குருக்கள் இணைந்து ஒப்புக்கொடுத்த கூட்டுத் திருப்பலியில் ஆறு இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் பங்கெடுத்தமை கண்குளிரும் காட்சியாக இருந்தது. அன்னையின் திருச்சுரூபப் பவனியும் சுரூப ஆசீரும் மக்களை மகிழ்வடைய வைத்தன.

**மடுத்தாயார் மடு யாத்திரிகர்களுக்கு கொடுக்கும் செய்தி**

மடுப்பதியில் ஒன்றுகூடும் 95% மானோர் மடுப்பக்திச் சூழலுக்குள் தம்மை அர்ப்பணித்து நேரத்தைச் செலவிடும் அதேவேளையில் 5% மானோர் தமது மடு வருகையின் நோக்கத்தை மறந்து, மடுப்பதியின் பக்திச் சூழலை மறந்து, மனம்போன போக்கிலே நேரத்தை விரயம்செய்துவருவது கவலை தரும் விடயமாகும். இப்படியானவர்களைப் பார்த்து அன்னை கூறும் பொன்மொழிகள்:

அன்புப் பிள்ளைகளே! நான் மடுப்பதியில் கடந்த 350 வருடங்களாக உங்களுக்காவே குடிகொண்டுள்ளேன். நம்பிக்கையோடு என்னை நாடி வருகிறவர்கள்மீது அருள்மழை பொழிந்தவண்ணமே உள்ளேன். உங்கள் விசுவாசம் நிறைந்த வேண்டுதல்கள் பலன்கொடுக்க நான் அனைத்தையும் செய்வேன். எனவே இப்பிரதேசத்தைப் புனித பூமியாகக் கணித்து நாட்களைச் செலவு செய்யுங்கள். புனித சூழலை அழிக்கவல்ல எச்செயல்களிலும் ஈடுபடாதீர்கள். மது அருந்தி மதிமயங்கி கும்மாளம் கொட்டுவதற்குரிய இடமல்ல எனது வசிப்பிடம். காதல் உணர்வுகளை வெளிக்கொணர்வதற்கான இடமுமல்ல எனது வசிப்பிடம். உல்லாசப் பயணத்தின் உறைவிடமுமல்ல எனது வசிப்பிடம். ஆபாச உடைகளுடன் நடமாடுவதற்கான இடமுமல்ல எனது வசிப்பிடம்.

மடுப்பதியில் நீங்கள் தங்கியிருக்கும் நாட்களில் மடுப்பதியின் பக்தி சூழலை மதித்து இச்சூழலினுள் உங்களை முற்றாக அர்ப்பணியுங்கள். மடுப்பதியின் ஒழுங்குகளைப் பின்பற்றுங்கள். செபங்களிலும் வழிபாடுகளிலும் அர்த்தத்தோடு பங்கொடுங்கள். இவைகள் அத்தனையையும் விருப்பத்தோடு கடைப்பிடித்து வருவீர்களானால் மனநிறைவோடு வீடு செல்வீர்கள். எனது கரங்கள் என்றும் உங்களை அணைத்த வண்ணமாகவே இருக்கும். மேலே குறிப்பிடப்பட்டவைகள் யாவும் மருதமடு அன்னையின் விருப்பங்கள்.

# முதலமைச்சரின் கருத்துத் தொடர்பாக ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

திருத்தந்தை உலகெங்கும் வாழும் பலகோடிக் கத்தோலிக்கருடைய ஆன்மீகத்தலைவரும், வழிகாட்டியும் ஆவார். இந்த வகையில் இலங்கைவாழ் கத்தோலிக்கராகிய நாமும் அவரது ஆன்மீகத் தலைமையையும், வழிகாட்டுதல்களையும் ஏற்று அவருக்குப் பெருமதிப்பளித்து வருகின்றோம். கத்தோலிக்க மதக்கோட்பாட்டு ரீதியிலும், ஒழுக்க சம்பந்தமான விடயங்களிலும் மனித மாண்பு சம்பந்தமான விடயங்களுக்கும், மடல்களுக்கும், பத்திரிகைப் பகிர்வுகளுக்கும் நாம் பெருமதிப்பும், முக்கியத்துவமும் கொடுத்து வருகின்றோம். கத்தோலிக்கரல்லாதோரும் மனித மாண்பு, உலக அமைதி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் பொது விடயங்களில் பாப்பரசரது கருத்துக்களுக்கு மதிப்புக்கொடுத்து வருவது எல்லோரும் அறிந்த உண்மை.

இந்தப் பின்னணியில் பாப்பரசரது பத்திரிகைப் பகிர்வுகள்பற்றி வடமாகாண சபை கேள்வி – பதில் நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டமை பொருத்தமற்றதாகவும், கத்தோலிக்க மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.


இலங்கையில் உள்ள எல்லா மாகாணங்களிலும் ஒப்பீட்டளவில் கூடுதல் விகிதாசாரத்தால் கத்தோலிக்கர் உள்ள மாகாணம் வடமாகாணம் (15%) ஆகும். இலங்கை முழுவதும் உள்ள கத்தோலிக்கர் விகிதாசாரம் ஏறக்குறைய 7%க்கு குறைவாகவும் சிலவற்றில் மட்டும் 7%க்கு சற்று கூடுதலாகவும் உள்ளது. இவ்வாறாக கணிசமான அளவு கத்தோலிக்கரைக்கொண்ட மாகாணத்தின் மாகாண சபையில் கத்தோலிக்கருடைய உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றமை துரதிஷ்டவசமானது.

இதுபோன்ற நிகழ்வுகள் இடம்பெறாதிருக்க தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் தங்கள் கருத்துக்களை அல்லது கேள்விகளுக்கு பதில் விளக்கங்கள் வழங்கும்போது கவனமாகவும் அவதானமாகவும் செயற்படும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

# புனிதர்களின் பாதையில்

## புனித எரோணிமுஸ்

*குரு - (கி.பி. 342 - 420)*



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

மறைநூலைச் சிறப்பான முறையில் மொழிபெயர்த்து அதற்கு "வுல்காத்தா" என்று பெயரிட்டதில் இவரின் பெருமை அடங்கியுள்ளது. இந்தப் புனிதருக்கு முன்தோன்றியவர்களோ, இவர் காலத்தவரோ, இப்புனித செயலைச் செய்யும் அளவுக்கு ஆற்றல் படைத்தவர்களாய் இல்லை. இவர் இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், கால்தேயிக் மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றவர். இந்த அறிவுத்திறனே இவ்வேலையைச் செய்ய இவரைத் தகுதியுள்ளவர் ஆக்கியது.

இப்போது யூகோஸ்லாவியா எனப்படும் டால்மிசியாவில், "ஸ்டிரின்" என்ற தமது சொந்த ஊரில் தமது படிப்புகளைத் தொடங்கினார். பின்னர் உரோமை சென்றார். பிறகு ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும் சென்று இறுதியாகப் பாலஸ்தினா நாட்டை அடைந்தார். அங்கு 5 ஆண்டுகள் பாலைவனத்தில் தனிமையில் வாழ்ந்தார். இறுதியாகப் பெத்லகேமில் கிறிஸ்து தோன்றிய குகை என்று நம்பப்படுகிற இடத்திற்கு வந்து சேர்ந்தார். கி.பி. 420ஆம் ஆண்டு செப்ரம்பர் 30இல் இறைவனடி சேர்ந்தார்.

"மறைநூலை அறியாமை, கிறிஸ்துவையே அறியாமை" என்று இவர் கூறியிருப்பதிலிருந்து மறை நூலுக்கு இவர் அளித்த சிறப்பிடம் விளங்கும். இவர் தினமும் எளிதில் எரிச்சல் கொள்ளக் கூடியவர். ஆனால் உடனே அதை உணர்ந்து வருந்தும் பண்பும் இவரிடமிருந்தது. தம்மிடமிருந்த குறைபாடுகளை நினைத்து ஒரு கல்லால் தமது நெஞ்சில் அடித்துக்கொள்வாராம். இவரது உருவப் படத்தில் இவ்வாறு வரைந்திருப்பதைப் பார்த்த பாப்பரசர் ஒருவர், "ஜெரோம்! இந்தக் கல்லை நீர் எடுத்துக்கொண்டது உமக்கு நலமாய் அமைந்தது. இந்தக் கல்லை பயன்படுத்தியிராவிடில், உமக்குத் திருச்சபை புனிதர் பட்டம் அளித்திராது" என்று கூறியிருக்கிறார்.

சிந்தனைக்கு:

நாள்தோறும் மறைநூலை நாம் ஆழ்ந்து படிப்போம். அதன்வழியாக இறைவன் நமக்குத் தருகின்ற ஆற்றல், ஒவ்வொரு நாளையும் உறுதியுடன் எதிர்கொள்ள உதவியாக அமையும்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### இளைஞனே ...... !

இளைஞனே!
நாளைய உலகின்
நாயகனே!
சரித்திரம் படைக்க
விழிப்புடன் காத்திருக்கும்
விசித்திர உலகின் வீரனே!

உன் ஓங்கிய குரலும்
ஒன்றிணைந்த கரமும்
உலகின் எழுச்சிக்கே
தேவையன்றி
வீழ்ச்சிக்கு வேண்டாம்.

ஆயுதம் செய்யும் நீ
அறிவியலில் புரட்சி செய்
வீழ்ச்சிக்குத்
துணைபோகும் நீ
விண்வெளிக்குத்
துணையாகப் போ!

விண்ணைக் கிழிக்கும் -
உன் விரல் நுனியால்
யாரினதும்
கண்ணைக் குத்த
முயலாதே!

உரமான உனது கரம்
உலகை உயர்த்த முற்படின்
நாளைய உலகின்
நம்பிக்கையாய்
நீ இருப்பாய்

***தே. சுகிந்தன்,***
***இலுப்பைக்குளம்***



### இயற்கை

மனிதனே!
நான் இறைவனின்
அற்புத வரம்
உனக்கு ஆயுட்காப்புறுதி
உன்னத கொடை
அட்சய பாத்திரம்
பூமிக்கு அலங்கார விளக்கு

ஏன் எதற்கு
என்மேல் கோபம்?
ஏன் இந்தக் குரோதம்?
என் பொறுமைக்கு
நீ எல்லையிட்டாய்
விளைவு சுனாமி
சுழல் காற்று

வேண்டாம்
உனைத் திருத்திக்கொள்.
என்னுடன் மோதாதே
அழிவு உனக்கு!

மறந்து விடாதே
நான் உன்னுடைய
அட்சய பாத்திரம்!

**காமலின் கனிசியா,**
**ஆவணம், நானாட்டான்**



### கல்லறைத் தூக்கம்

மறைந்துவிட்ட சூரியன்
மறுபடியும் வராதென்று
யார் தட்டுகின்றார்கள்
மடையர்கள்...!

கதறக் கதற எம் பிஞ்சுகளை
காலனவன்
பறித்துச் சென்றதைக்
கண்களால் கண்ட நாம்
இன்னும் சாகவில்லை
கல்லறைக்குள்
தூங்குகின்றோம்.

உறவுகள் தொலைந்து போக
உடமைகள் அழிந்து போக
உயிரை மட்டும்
பிடித்துக்கொண்டு
காடுகாடாய்த் திரிந்த உங்கள்
கஷ்டங்களைக் கண்ட நாம்
இன்னும் சாகவில்லை
கல்லறைக்குள்
தூங்குகின்றோம்.

உரிமைகள் பெறவேண்டும்
இவ்வுலகில் எமக்கோர்
இடம் வேண்டும்
கனவுகள் தொலையாமல்
கல்லறைக்குள்
தூங்குகின்றோம்.

விதைத்த விதைகள்
விருட்சம் பெறும்
காலச்சுழற்சியில்
கல்லறைகள் திறக்கும்
அப்போது தெரியும்
ஆழப்பிறந்தவர் யாரென்று!

**தே. சுகிந்தன்,**
**இலுப்பக்குளம்**

### விடிவைத் தேடி...

கன்னத்தில்
கரைபுரண்டோடும்
கண்ணீரை ஏந்திய
கண்கள்தான் எத்தனை!
தாய் தந்தை
உறவுகளைப் பிரிந்து
தனிமையில் வாழும்
மனங்கள் இன்று எத்தனை!

வாழ்வு எங்கே? என ஏங்கி
வாழ்நாட்களை
கேள்விக்குறியாக்கி - பல
வலிகளைத்
தாங்கிக்கொண்டும் - எப்போ
வழிகிடைக்கும் என
ஏங்கிடும் விழிகள் எத்தனை!


விடியாத இரவுகளை - தம்
விழிகளிலே ஏந்தி
விட்டில் பூச்சிபோல
வீழ்ந்து விடுவோமோ என்று
ஏங்கும் மனங்கள்
இன்று எத்தனை!

துள்ளித் திரியும்
இளமைப் பருவத்தை
துக்கத்தோடு
கழித்துக்கொண்டு
சிறைக் கதவுக்குள்ளே
சிதைக்கப்பட்டிருக்கும்
உள்ளங்கள்
இன்று எத்தனை!

விடிவு எங்கே? - அது
விடியாதோ இங்கே - என
ஏங்கிடும் எம்மவர்க்கு
விடிந்திடாதோ நல்வாழ்வு?

**பெ. ஆன்மேரி,**
**விடத்தல்தீவு**

## கொஞ்சம் சிரிங்க



**எல்.கே.ஜி. பையன்** : என்னை உங்களுக்கு பிடிச்சிருக்கா?
**ஆசிரியை:** ஆமாம்.
**எல்.கே.ஜி. பையன்** : அப்படியானால், என் அம்மா அப்பாவை வரச்சொல்லி உங்கள் வீட்டில் பேசச் சொல்லட்டுமா?
**ஆசிரியை** : டேய் முட்டாள்... உன் மனசுல என்ன நினைச்சிக்கிட்டிருக்க?
**எல்.கே.ஜி. பையன்** : ஹேய்ய... நான் டியூசனுக்கு வாறதைப்பற்றி சொன்னேன்.
கிறுக்கு புள்ள எப்ப பார்த்தாலும் நம்மளயே நினைச்சிக்கிட்டு இருக்கா!

..................................

**மதன்** : என் தம்பி ரொம்ப பயந்த சுபாவம்! சூடா இட்லிகூட சாப்பிட மாட்டான்.
**விமல்** : ஏன்?
**மதன்** : அதுல ஆவி இருக்குமே!

..................................

**மனைவி** : போதையில பக்கத்து பார்வதி வீட்டுல ஏன் நுழைஞ்சிங்க?
**கணவர்** : தண்ணி போட்டா என் மூஞ்சுல முழிக்காத எண்டு நீதாண்டி சொன்ன...

..................................

**ஒருவர்** : வெளியே ''உத்தரவின்றி உள்ளே வரக்கூடாது'' என்று எழுதிப்போட்டிருக்கிறேன். ஏன் உள்ளே வந்தாய்?
**மற்றவர்** : உத்தரவு வாங்குவதற்காகத்தான் உள்ளே வந்தேன்.

**வைத்தியர்** : உங்க பையனுக்கு நாளைக்கு மேஜர் ஆப்ரேஷன்...
**ஒருவர்:** டாக்டர் என் பையன் ரொம்ப சின்னவன் மைனர் ஆப்ரேஷன் வேண்ணா பண்ணுங்களேன்.....

..................................

**ஒருவர்** : மச்சான் என்ர மனைவி என்ன செய்தாலும் குறுக்க நிக்கிறாடா?
**மற்றவர்** : வேண்டுமென்றால் லொறி ஓட்டிப் பாரன், குறுக்க நிக்கிறாவாண்டு பாப்பம்.

..................................

**அப்பா** : உன் வகுப்புல புதுசா ஒரு மாணவன் அட்மிசன் ஆகியிருக்கிறானாமே.
**மகன்** : ஆமாம்பா! உங்களுக்கு எப்படி இது தெரியும்?
**அப்பா** : 27வது ரேங்குல இருந்த நீ 28வது ரேங் வாங்கியிருக்கிறாயே அதுதான்.

..................................

**மறையாசிரியர்** : திருப்பலியில் மிகவும் பிடித்த பகுதி என்ன?
**மாணவன்** : ''சென்று வாருங்கள் திருப்பலி முடிந்தது'' என்று பாதர் கூறும் கடைசி வார்த்தை.

..................................

**ரவிக் பொலிஸ்** : எந்த தைரியத்திலடா நீ லைசன்ஸ் இல்லாம வந்தாய்?
**வந்த நபர்:** நூறு ரூபா இருக்கு என்ற தைரியத்திலதான்.

## மன்னா விளம்பரப் பலகை

''நீ எதைச் செய்தாய் என்பதைவிட எந்த அளவுக்கு அவற்றை அன்போடு செய்தாய் என்பதே முக்கியம்''

''நம்மிடம் ஏதும் இல்லை என்று நினைப்பது ஞானம்.
நம்மைத் தவிர ஏதும் இல்லை என்று நினைப்பது ஆணவம்.
ஞானம் பணிந்து வீழ்ந்து வெற்றிமேல் வெற்றி குவிக்கின்றது.
ஆணவம் நிமிர்ந்து நின்று அடிமேல் அடி வாங்குகின்றது''

..................................

''முட்டாளின் தற்பெருமை அழிவைத் தரும்.
அதிக தேவைகள் அதிக துன்பங்கள் தரும்''

..................................

''தூய மனம் படைத்தவன் எதையும் தூயதாகவே நோக்குவான்''

வலியோடு போராடினால்தான், ஒருபெண் தாயாக முடியும். இருளோடு போராடினால்தான், புழு வண்ணத்துப் பூச்சியாக முடியும். மண்ணோடு போராடினால்தான், விதை மரமாக முடியும். வாழ்க்கையோடு போராடினால்தான் நீ வரலாறு படைக்க முடியும்.

..............................................

நீங்கள் தூங்கும்போது வருவதல்ல ''கனவு'' உங்களை எது தூங்கவிடாமல் செய்கிறதோ அதுதான் ''கனவு''

..............................................

பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையில் வெளிப்பாடு!

நன்றாக வாழவேண்டுமானால் முன்கூட்டியே திட்டமிடு, நேரத்தைத் தள்ளிப்போடாதே. தாமதங்கள் அபாயமான முடிவைக் கொடுக்கின்றன.

உங்களால் மறக்கமுடியாத மற்றவர்களின் குற்றங்களை மன்னித்துவிடுங்கள், உங்களால் மன்னிக்க முடியாத குற்றங்களை மன்னித்துவிடுங்கள்.

## மருத்துவக் குணங்கள்



### குரல் இனிமை பெற

**பேரீச்சம் பழம்**



பேரீச்சம்பழமும் வெண்ணெயும் சேர்த்துச் சாப்பிட்டால் குரலில் இருக்கும் ககரப்பு மறைந்து இனிமையான குரல் கிடைக்கும்.

**மாவிலை**



முற்றிய மாவிலை நான்கை, 200 மி. லீற்றர் நீரில் போட்டுக் கொதிக்க வைத்துக் குடிக்க குரல் இனிமை பெறும்.

**சுக்குமிளகு திப்பிலி**



அதிமதுரம், பனங்கற்கண்டு, திப்பிலி ஆகியவற்றைச் சம அளவு இடித்து, காலை, மாலை நெல்லிக்காயளவு சாப்பிட்டு வந்தால் இனிமையான குரல் கிடைக்கும். அதுபோல் வல்லாரைக் கீரையைத் தினசரி சாப்பிட்டு வந்தாலும் இனிமையான குரல் கிடைக்கும்.

**சின்ன வெங்காயம்**



சின்ன வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, ஒரு மேசைக்கரண்டி அளவு வெண்ணெயினுள் வதக்கி அடிக்கடி சாப்பிட்டால் இனிமையான குரல் கிடைக்கும்.

**தேன்**



தினமும் காலையில் வெறும் வயிற்றில் தேனை வெதுவெதுப்பான நீரில் கலந்து குடித்தால் தொண்டையில் இருக்கும் கரகரப்பு நீங்கி இனிமையான குரல் கிடைக்கும்.

### உடல் பாகங்கள் உறுதி பெற

**கண்**



சூரிய வெளிச்சத்தைப் பாதுகாப்போடு பாருங்கள். கணனி, தொலைபேசி, மடிக்கணனி போன்றவற்றில் மூழ்காதீர். விற்றமின் ஏ நிறைந்த கீரை, காய்கறிகளை அதிகம் உணவில் சேருங்கள்.

**மூளை**



உணவில் தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்துங்கள். தொடர்ந்து சீரான உடற்பயிற்சி அவசியம். மூளைக்குச் சவாலான புதிர்களை விடுவிக்கப் பழகுங்கள்.

**தோல்**



ஒரேஞ்சு, எலுமிச்சை முதலான விற்றமின் 'சி' நிறைந்த உணவுகளைச் சாப்பிடுங்கள். போதுமான அளவு நீர் அருந்துங்கள். தரமான அழகுப் பொருட்கள் மட்டும் பயன்படுத்துங்கள்.

**வயிறு மற்றும் சிறுகுடல்**



நார்ச்சத்து உணவுகளைச் சாப்பிடுங்கள். எந்த உணவையும் நன்றாக மென்று சாப்பிடவும். பச்சைக் காய்கறிகள், பழங்கள் சாப்பிடுங்கள். நேரத்துக்குச் சாப்பிட வேண்டும். போதுமான அளவுக்கு தண்ணீர் பருகுவது வயிற்றுக்கு ஏற்றது.

**எலும்பு**



விற்றமின் D3 மற்றும் விற்றமின் K அவசியம். கல்சியம் போதுமான அளவு எடுத்துக்கொள்ளுங்கள். தினமும் நடைப்பயிற்சி அவசியம். இரும்புச்சத்து உள்ள உணவுகளைச் சாப்பிடுங்கள்.

## சமையல் குறிப்பு

### *வாழைக்காய் மசாலா சிப்ஸ்*

**தேவையானவை:**

நன்கு முற்றிய வாழைக்காய் - 2
பொரிக்க எண்ணெய்
உப்பு - தேவைக்கு
மிளகாய்த்தூள் அல்லது
மிளகுத்தூள் - தேவைக்கு



**செய்முறை :**

கடாயில் எண்ணெயை நன்கு காயவைக்கவும். வாழைக்காயின் தோலைச் சீவி எடுத்துவிட்டு நேராக எண்ணெயில் காயைத் துண்டம் துண்டமாக சீவவும். பின் தீயை குறைக்கவும். வாழைக்காய் நன்கு பொரிந்ததும் தேவையான உப்புக்கரைசல் தண்ணீரை தெளிக்க வேண்டும். இது பொரிந்து கடகடவென்று வந்ததும் வடித்து, மிளகாய்த்தூள் தூவி ஆறியதும் டப்பாவில் போட்டு வைக்கவும்.

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 21 -

### 4.2.5 ஆண்டின் பொதுக் காலம்

**422. ஆண்டின் பொதுக்காலம் என்பது என்ன?**

மேற்கூறப்பட்ட, சிறப்புக் காலங்கள் தவிர எஞ்சியுள்ள காலம் 'ஆண்டின் பொதுக்காலம் எனப்படுகிறது. இதில் 33 அல்லது 34 வாரங்கள் அடங்கியிருக்கும். இவற்றில் கிறிஸ்துவினுடைய மறைநிகழ்வின் யாதொரு சிறப்பு நிகழ்வும் கொண்டாடப்படுவதில்லை. மாறாக, கிறிஸ்துவின் மறைநிகழ்வே முழுமையாக நினைவுகூரப்படுகிறது. இக்காலம் புனிதர்களின் திருநாள்களையும் மற்ற பொதுவான நாள்களையும் சிறப்பிக்கும் காலம். அதாவது, இக்காலத்தின் வார நாள்களில் புனிதர்களின் விழாக்கள், சிறப்பு நினைவுகள், விருப்பத் திருப்பலிகள், தலத்திருச்சபை விழாக்கள் போன்றவற்றை சிறப்பிக்கப்படுகின்றன.

பொதுக்காலம் இரு பகுதிகளாகப் பிரிந்திருக்கின்றது. முதலாவது ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா ஞாயிறுக்குப்பின்/ திருமுழுக்கு திருவிழாவுக்குப்பின் பின்வரும் அடுத்த நாள் (திங்கள் கிழமை) தொடங்கி, திருநீற்றுப் புதனுக்கு முன்னைய நாள் (செவ்வாய் கிழமை) முடிவடைகிறது. இது 8 அல்லது 9 வாரங்களைக் கொண்டது.

இரண்டாவது, தூய ஆவியார் பெருவிழாவிற்கு அடுத்தநாள் (திங்கள் கிழமை) தொடங்கி, திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறுக்கு முன்னைய நாள் (சனிக்கிழமை) முடிவடைகிறது இது 25 அல்லது 26 வாரங்களைக் கொண்டது.

**423. ஆண்டின் பொதுக்கால ஞாயிறு என்பது என்ன?**

'பொதுக்கால ஞாயிறு' கொண்டாட்டத்தின் வழியாக ஒவ்வொரு வாரமும் நாம் சாதாரண கிறிஸ்தவர்களாக விளங்கும் தன்மையைக் கொண்டாடுகிறோம், நமக்காக இறந்து, உயிர்த்தெழுந்து, மீண்டும் வரவிருக்கிறவரைப் பின்பற்றி வாழும் மக்களாகத் திகழ ஞாயிற்றுக் கிழமைகள் கடையாணி போன்று செயல்படுகின்றன.

### 4.2.6 திருவழிபாட்டு ஆண்டு காலங்களின் தொகுப்பு

**424. திருவழிபாட்டு ஆண்டு காலங்களின் தொகுப்பு?**

01. காலம்:- திருவருகை
 நாள்:- கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முன் நான்கு வாரங்கள்
 பொருள்:- காத்திருத்தல், எதிர்பார்த்தல், தயாரித்தல், நம்பிக்கை, மகிழ்ச்சி, ஆவல்
 நிறம்:- ஊதா, 3ஆம் வாரம் இளஞ்சிவப்பு
02. காலம்:- கிறிஸ்து பிறப்பு
 நாள்:- பன்னிரு நாள்கள் (டிசம்பர் 25இலிருந்து ஜனவரி 5 வரை)
 பொருள்:- கிறிஸ்துவின் பிறப்பு, வார்த்தை மனிதர் ஆனார், கொண்டாட்டம், மகிழ்ச்சி, ஒளி, மீட்பு
 நிறம்:- வெள்ளை, தங்கம், வெள்ளி (கொண்டாட்டம், மகிழ்ச்சி)
03. காலம்:- திருக்காட்சி
 நாள்:- ஜனவரி 6 அல்லது ஜனவரி முதல் திகதிக்குப் பின்வரும் ஞாயிறு
 பொருள்:- இயேசு கடவுளின் மகனாக வெளிப்படுதல், மூன்று ஞானிகளின் வருகை, மகிழ்ச்சி
 நிறம்:- வெள்ளை, தங்கம், வெள்ளி (கொண்டாட்டம், மகிழ்ச்சி)
04. காலம்:- பொது
 நாள்:- ஜனவரி 7இலிருந்து திருநீற்றுப் புதனுக்கு முன் உள்ள செவ்வாய் வரை
 பொருள்:- கிறிஸ்துவின்/ கிறிஸ்தவனின் பொதுவான பண்பை வெளிப்படுத்துதல்
 நிறம்:- பச்சை (வாழ்வு, வளர்ச்சி)
05. காலம்:- திருநீற்றுப்புதன்
 நாள்:- தவக்காலத்தின் தொடக்கம்
 பொருள்:- தவம்/ ஒறுத்தல், மீட்பர் ஒருவர் தேவை
 நிறம்:- ஊதா (பாவநிலை, இறப்பு, தவம்)
06. காலம்:- தவம்
 நாள்:- கிறிஸ்து உயிர்த்தெழுதல் ஞாயிறுக்குமுன் நாற்பது நாள்கள்
 பொருள்:- தவம், தன்னல மறுப்பு, பாஸ்காவுக்காகத் தயாரித்தல்.
 நிறம்:- ஊதா (ஒறுத்தல், பரிகாரம்)
07. காலம்:- குருத்து ஞாயிறு
 நாள்:- புனித வாரத் தொடக்கத்தின் ஞாயிறு
 பொருள்:- கிறிஸ்து வெற்றிப் பயணம், கிறிஸ்து அரசராக
 நிறம்:- (சிவப்பு – பாடுகள்)
08. காலம்:- புனித வாரம்
 நாள்:- கிறிஸ்து உயிர்த்தெழுதலுக்கு முன் உள்ள வாரம், கிறிஸ்துவின் பாடுகள் ஞாயிறு, குருத்து ஞாயிறு, புனித வியாழன், புனித வெள்ளி, புனித சனி உள்ளடக்கியது.
 பொருள்:- பாஸ்காவுக்கான தயாரிப்பு, கிறிஸ்துவினுடைய வாழ்வின் இறுதி நாள்கள், அவரது இறப்பு ஆகியவற்றை நினைவுகூர்ந்து தியானித்தல்.



 நிறம்:- ஊதா, சிவப்பு (சிவப்பு - இரத்தம்)
09. காலம்:- புனித வியாழன்
 நாள்:- உயிர்த்தெழுதலுக்கு முன் உள்ள வியாழன் நற்கருணையை ஏற்படுத்திய நாள்
 பொருள்:- ஒருவர் மற்றவரை அன்பு செய்தல், 'புதிய கட்டளையை' நினைவுகூர்தல்
 நிறம்:- வெள்ளை
10. காலம்:- புனித வெள்ளி
 நாள்:- கிறிஸ்துவின் பாடுகள்
 பொருள்:- கிறிஸ்துவின் இறப்பினை நினைவுகூர்தல் (துயரம், பாவமன்னிப்பு)
 நிறம்:- சிவப்பு (இரத்தம், கிறிஸ்துவின் பலி)
11. காலம்:- உயிர்த்தெழுதல் திருவிழிப்பு
 நாள்:- உயிர்த்தெழுதலுக்கான முன் தயாரிப்புத் திருவிழிப்பு கொண்டாட்டம், திருவிழிப்பும் உயிர்த்தெழுதலும் ஒரே நிகழ்வாக கொண்டாடப்படுதல்.
 பொருள்:- இஸ்ரயேல் மக்களின் மீட்புப் பயணத்தை நினைவு கூர்தல்.
 நிறம்:- வெள்ளை, தங்கம்/ வெள்ளி
12. காலம்:- உயிர்த்தெழுதல் ஞாயிறு
 நாள்:- பாஸ்காப் பெருவிழா
 பொருள்:- உயிர்த்தெழுதல், நிலைவாழ்வு, வெற்றி, மகிழ்ச்சி, ஒளி, வாழ்வு
 நிறம்:- வெள்ளை, தங்கம்/ வெள்ளி
13. காலம்:- பாஸ்கா காலம்
 நாள்:- உயிர்த்தெழுதல் ஞாயிறுக்குப் பின்வரும் ஏழு வாரங்கள்
 பொருள்:- தூய ஆவியாரின் அருள் பொழிவு, திருச்சபை பிறந்தநாள், கடவுளின் வல்லமை.
 நிறம்:- சிவப்பு (கடவுளின் ஆற்றல்)
14. காலம்:- தூய ஆவியார்
 நாள்:- உயிர்த்தெழுதலுக்குப் பின்வரும் ஏழாம் ஞாயிறு
 பொருள்:- தூய ஆவியாரின் அருள்பொழிவு, திருச்சபை பிறந்த நாள், கடவுளின் வல்லமை.
 நிறம்:- சிவப்பு (கடவுளின் ஆற்றல்)
15. காலம்:- பொது
 நாள்:- தூய ஆவியார் பெருவிழாவுக்குப் பின்வரும் திங்கள் முதல் திருவருகைக்கால முதல் ஞாயிறுக்கு முன்வரும் சனிக்கிழமை வரை
 பொருள்:- கிறிஸ்துவில் வளர்தல், சிறப்புக் கொண்டாட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது, மூவொரு கடவுள், கிறிஸ்து அரசர், அனைத்துப் புனிதர்
 நிறம்:- பச்சை, சிவப்பு

### 4.3 புனிதர்கள்

**425. ஆராதனை, வணக்கம் - இவ்விரண்டையும் தெளிவுபடுத்துக?**

- கடவுள்:- ஆராதனை (Latria)
- மரியா:- உயர் வணக்கம் (Hypeerdulia)
- புனிதர்:- வணக்கம் (Dulia)

**426. புனிதர்களுக்கு உரிய பொதுத்திருப்பலி பகுதி எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?**

- கோவில் நேர்ந்தளிப்பு - புனித கன்னி மரியா
- மறைச் சாட்சியர் - மேய்ப்பர்கள்
- மறைவல்லுநர்கள் - கன்னியர் - புனிதர் (ஆண் / பெண்)

**427. புனித கன்னி மரியாவுக்கு உரிய பெருவிழாக்கள் என்ன?**

- புனித கன்னி மரியா இறைவனின் தாய்
- புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு
- புனித கன்னி மரியாவின் அமல உற்பவம்.

**428. புனித கன்னி மரியாவுக்கு உரிய திருவிழாக்கள் எவை?**

புனித கன்னி மரியா – எலிசபெத்து சந்திப்பு, புனித கன்னி மரியாவின் பிறப்பு

**429. புனித கன்னி மரியாவுக்கு உரிய கட்டாய நினைவு நாள்கள் எவை?**

புனித கன்னி மரியா - அரசி, துயர அன்னை, செபமாலை அன்னை, புனித கன்னி மரியா – காணிக்கையாக அர்ப்பணிக்கப்படுதல்.

**430. புனித கன்னி மரியாவுக்கு உரிய விருப்ப நினைவு நாள்கள் எவை?**

- லூர்து அன்னை - புனித கன்னி மரியாவின் மாசற்ற இதயம்
- கார்மேல் அன்னை - புனித கன்னி மரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு.

**431. புனித கன்னி மரியாவுக்கு உரிய பொதுத் திருப்பலிகளும் நேர்ச்சித் திருப்பலிகளும் எவை?**

**அ) பொதுத் திருப்பலிகள்:-**

புனித கன்னி மரியா – திருச்சபையின் அன்னை, புனித கன்னி மரியாவின் திருப்பெயர், புனித கன்னி மரியா – திருத்தூதர்களின் அரசி.

**ஆ) நேர்ச்சித் திருப்பலிகள்:-**

புனித கன்னி மரியா – படைப்பனைத்திற்கும் அரசி, புனித கன்னி மரியா – நோயாளிகளுக்கு நற்சுகம், புனித கன்னி மரியா – அமைதியின் அரசி

**432. புனித மரியாவின் அமல உற்பவத் திருநாள் என்பது என்ன?**

கடவுளுடைய தாயாகிய புனித மரியா உற்பவித்த அந்த நேரத்திலிருந்து பிறப்புவழி பாவக் கறையினின்று காப்பாற்றப்பட்டதைக் கொண்டாடும் திருநாள்.

**433.இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருநாள் எதை நினைவுபடுத்துகிறது?**

மோயீசன் கட்டளைப்படி, இயேசு பிறந்த நாற்பது நாளுக்குப்பிறகு, எருசலேம் கோவிலில் கடவுளுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டதை நினைவுபடுத்துகிறது.

**434. இத்திருநாள் திருப்பலியில் நிகழ்த்தப்படும் சிறப்புச் சடங்கு எது?**

எருசலேம் கோவிலில் மரியா தம் திருமகனைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தார். அப்போது அங்கிருந்த நீதிமானான சிமியோன் என்பவர் குழந்தை இயேசுவைத் தம் கைகளில் ஏந்தி, இவர் உலகிற்கு ஒளியைக் கொண்டுவந்தவர் என்று வாழ்த்தியதன் நினைவாக இந்நாளில் அருள்பணியாளர் மெழுகுதிரியைப் புனிதப்படுத்துகிறார். அதன்பின் மெழுகுதிரிப் பவனி நடைபெறுகிறது.

**435. கபிரியேல் தூதர் மங்கள வார்த்தை சொன்ன திருநாளில் எதைக் கொண்டாடுகிறோம்?**

கபிரியேல் தூதர் மரியாவுக்குத் தோன்றி, கடவுள் அவரை இறை அன்னையாகத் தெரிந்துகொண்டார் என்று அவரிடம் அறிவிக்கவந்த நாளை நினைவுபடுத்திக் கொண்டாடுகிறோம்.

**436. புனித மரியா எலிசபெத்தைச் சந்தித்த திருநாள் நமக்கு எதை நினைவூட்டுகிறது?**

மரியா செக்கரியாவின் வீட்டிற்கு வந்து, எலிசபெத்தைச் சந்தித்தபோது எலிசபெத்து மரியாவை நோக்கி, 'ஆண்டவரின் தாய்' என வாழ்த்தினார், அப்போது மரியா கடவுளுக்கு நன்றியறிதலாக, 'ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது' என வாழ்த்தியதை இந்நாள் நினைவூட்டுகிறது.

**437. புனித மரியாவின் விண்ணேற்பு கூறும் மறை உண்மை என்ன?**

புனித மரியா இவ்வுலக வாழ்வின் முடிவில் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டதையும் அங்கே அவர் விண்ணக அரசியாகக் கடவுளால் முடி சூட்டப்பட்டதையும் நினைவுபடுத்துகிறது.

**438. திருச்சபை ஏன் புனித மரியாவின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறது?**

கடவுள் தம் ஒரே மகனுக்காக மரியாவை முன்குறித்து, அழைத்து, ஏற்புடையவராக்கி மாட்சியில் பங்குபெறச் செய்ய விரும்பினார் (உரோ 8:28-30). இவ்வாறு புனித மரியா கருவான காலத்திலிருந்தே பிறப்புவழி பாவத்திலிருந்து காப்பாற்றப்பட்டு, அருள்மிகுந்தவராக இருந்ததை முன்னிட்டுத் திருச்சபை இந்நாளைக் கொண்டாடுகிறது.

**439. காணிக்கை அன்னை திருநாள் என்பது என்ன?**

புனித கன்னிமரியா, மூன்று வயதில் கோவிலில் தம் பெற்றோரால் கடவுளுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்படும்போது, மாசற்ற கற்பினைக் கடைப்பிடிக்க வார்த்தைப்பாடு கொடுத்தார் என்பது மரபு நம்பிக்கை ஆகும். இந்த நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்காகத் தான் திருச்சபை காணிக்கை அன்னை திருநாளை ஏற்படுத்தியது.

**440. புனித கன்னிமரியாவுக்குரிய சில திருவிழா நாள்களைக் குறிப்பிடவும்?**

1. அன்னை – ஜனவரி 01, 2. லூர்து – பெப்ரவரி 11
3. மாசற்ற இதயம் - (இயேசுவின் திருஇதய விழாவுக்குப் பின்வரும் சனிக்கிழமை), 4. மரியா, எலிசபெத்து சந்திப்பு – மே 31, 5. கார்மேல் - யூலை 16, 6. விண்ணேற்பு – ஒகஸ்ட் 15, 7. அரசி – ஒகஸ்ட் 22, 8. பிறப்பு – செப்ரம்பர் 8
9. துயரம் - செப்ரம்பர் 15, 10. செபமாலை – ஒக்ரோபர் 7
11. காணிக்கை – நவம்பர்21, 12. அமல உற்பவம் - டிசம்பர்8

**441. வானதூதர்களின் திருநாள்கள் எவை?**

காவல்தூதர்களைத் (ஒக்ரோபர் 2) தவிர வேறு மூன்று தனிப்பட்ட வானதூதர்களைத் திருச்சபை நமக்கு அளித்திருக்கிறது. அவர்கள் தலைமைத் தூதர்களான புனித மிக்கேல், புனித இரபேல், புனித கபிரியேல் (செப்ரம்பர் 29).ஆவர்.

(அடுத்த இதழிலும் தொடரும்)

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.182

## தொடக்கநூல் 1முதல் 25 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | | ❖ | 03 | | | |
| | ❖ | | ❖ | | | 04 | ❖ | 05 | ❖ |
| | 06 | ❖ | 07 | | | 08 | | | 09 |
| 10 | | | | 11 | ❖ | ❖ | ❖ | ❖ | |
| | | | 12 | ❖ | | | 13 | 14 | |
| | ❖ | | | | 15 | ❖ | ❖ | | |
| | | 16 | ❖ | ❖ | 17 | 18 | | 19 | 20 |
| 21 | 22 | | | | ❖ | | 23 | 24 | |
| | ❖ | 25 | | ❖ | ❖ | | | ❖ | |
| 26 | | | ❖ | 27 | | | 28 | | 29 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(---- என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

2. அப்போது கடவுள் புற்பூண்டுகளையும் விதை ......... செடிகளையும் ---- என்றார்''.
3. ஆபிராம் அந்நாட்டில் ---- ................. கருவாலி மரத்தை அடைந்தார்.
7. இரண்டாவது பிள்ளை ---- வெளிவந்தான். எனவே அவனுக்கு ............ என்று பெயரிடப்பட்டது.
8. பின்னர், நிலப்பரப்பிலிருந்து ---- ............ ஒன்றைத் --- அனுப்பினார்.
10. ஆண்டவராகிய கடவுள் ---- ஒரு ........ அமைத்துத் --- வைத்தார்.
13. முதலாவதன் பெயர் .............
17. மாலையும் காலையும் நிறைவுற்றது ............ நாள் முடிந்தது.
19. கூசின் புதல்வர்: ............ ----
22. ஆகவே ஆபிராம் ---- என்ற ............ மரத் தோப்பருகில் வந்து வாழ்ந்தார்.
24. இந்தச் சித்திம் பள்ளத்தாக்கில் ............ குழிகள் மிகப் பல இருந்தன.
25. ................ மேகத்தின்மேல் ---- நினைவுகூர்வேன்'' என்றார்.
26. ............ ஆடு மேய்ப்பவன் ஆனான்.
27. இதனால் அந்த நகருக்குச் .......... என்னும் பெயர் வழங்கிற்று.

### வலமிருந்து இடம்

2. ...................... விலகுங்கள் ---- அனைத்தும்.
4. ஆனால் உனக்குப் பிறப்பவனே ---- ........... அருளப்பட்டது.
6. மண்ணுலகின்மேல் ---- அதன்மேல் ................ தோன்றும் பொழுது.
11. நோவாவிற்கு சேம், ........... எப்பேத்து என்னும் மூன்று புதல்வர் பிறந்தனர்.
12. அவர்கள் .............. வாழ்வதற்கு இடம் போதவில்லை.
13. அங்கே ஆபிரகாம் ஒரு பலி .................... அமைத்து ---- வைத்தார்.
15. ஏனெனில் ..................... அவனை எடுத்துக்கொண்டார்.
16. அப்பொழுது ---- உடனே .................த் தூணாக மாறினாள்.
19. அவர், உன் மகனை ---- பகுதிக்கு ...........................
23. அவர்கள் ............... னும் பொழுது ----- நின்றுகொண்டிருந்தார் (இதில் உகரம் மாறியுள்ளது)
29. மிதியானின் புதல்வர் ஏப்பா ............. ---- ஆவர்.

### மேலிருந்து கீழ்

1. கடவுள் உலர்ந்த ---- ......... என்றும் பெயரிட்டார்.
2. இதனால் கணவன் ............... ---- ஒன்றித்திருப்பான்.
3. பின் மூத்தவள் ---- ............... என்று பெயரிட்டாள்.
5. ................... யாபாலைப் பெற்றெடுத்தாள்.
9. எனவே அவனுக்கு ---- ............... என்று பெயரிட்டார்.
14. உயிருள்ள அனைத்தும் ................ ---- சென்றன.
16. கடவுள் தம் ................. மானிடரைப் படைத்தார்.
18. நகர் மக்களின் புதல்வியர் ................ எடுக்க இங்கே வருவார்கள்.
20. பின்னர் அவர் வெண்ணெய், ............ சமைத்த ---- வைத்தார்.
23. தெராகு தம் மகன் ---- ............ என்ற ----- சென்றார்.

### கீழிருந்து மேல்

5. நெகேபிலிருந்து ---- ............. க்கும் இடையே ---- அடைந்தார்.
11. என் உயிரைக் ................. பொருட்டு நீர் காட்டிய பேரன்பு உயர்ந்தது.
12. நோவாவிற்கு ஐந்நூறு வயதானபோது, அவருக்குச் ............. ---- பிறந்தனர்.
17. ஆகவே ஆண்டவர் காயினிடம் ---- ........... வாடி இருப்பது ஏன்?
19. புற்பூண்டுகளையும் --- ................. களையும் --- விளைவித்தது.
20. அவன் .................... என்னும் ---- வைத்தான்.
21. கானானின் புதல்வர்களில் ஒருவர்............
23. ஆராமின் புதல்வருள் ஒருவர்..........
26. உனக்கு ஆசி கூறுவோருக்கு நான் ............ வழங்குவேன்.
28. மீண்டும் அவர் ---- .......... மட்டும் காணப்பட்டால் என்ன செய்வீர்?
29. ஆபிரகாமோ பெயர்செபாவில் ............. மரத்தை -- தொழுதார்.

## மன்னார் மாவட்டத்தில் .....

4ஆம் பக்கத் தொடர்ச்சி

எதிர்மறை எண்ணங்கள் அடிக்கடி ஏற்படுவது சகஜம். ஆனால் அவற்றில் ஊன்றிக் கவனம் எடுக்கும்போது அவையே வாழ்வின் முழுவதுமாகி எமது அகப்பார்வையினை மாற்றிவிடுகின்றன. இதனால் உறவுகளுக்கிடையில் விரிசல் ஏற்படுகின்றது. எனவே எதிர்மறை எண்ணங்களில் இருந்து விடுபடுதல் என்பது மிகமிக முக்கியமானதொரு செயற்பாடாகும்.

ஒருவர் தான் பலவீனமானவர் என்றும் தன்னால் எதுவுமே செய்யமுடியாது என்றும் கையாலாகாத தனத்துடன் திரும்பத்திரும்பச் சிந்திப்பாராயின் அவரால் எதையும் செய்யமுடியாமல் போகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

கீழைத்தேய நாடுகளில் கலாசார, சமய விழுமியங்கள் உடல் மன ஒருமைப்பாட்டினை மிகவும் வலியுறுத்துகின்றன. "வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்'' என்ற பாடலைக் கேட்டு இரசித்து இருக்கின்றோம். ஆனால் வாழ்கின்றோமா என்றால் இல்லை....!

தற்போதைய நவீன யுகத்தில் மனிதனும் இயந்திரமாகிவிட்டதால் மனித மாண்பு, பண்பு, அன்பு, இரக்கம் இவையனைத்தும் இழந்தவர்களாய் தனிப்பட்டே வாழப் பழகிக்கொண்டு இருப்பதால்தான் தற்கொலைகள் அதிகமாகியுள்ளது.

மெய்ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையில் மனிதவர்க்கம் செய்யவேண்டியுள்ளது அஞ்ஞானவாசம்.

தற்கொலையினைத் தடுப்பதற்கான சில அணுகுமுறைகள் உண்டு. ஒவ்வொருவருக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு வேண்டும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஆழமான நட்பு, நம்பிக்கை, கூட்டாக இணைந்து செயலாற்றும் திறன், சமத்துவமான பொதுநலச் சிந்தனை இவையனைத்தினையும் எமது இளைய தலைமுறையினர் வாழ்வாகக்கொண்டால் அந்த வாழ்வு இனிதே அமையும். உன் சாதனைக்கு நீ போடும் எல்லை நீ மேற்கொள்ளும் தற்கொலை.

வாழ்வானது ஒரு முறை.... வாழ்த்தட்டுமே தலைமுறை.....

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட்

7ஆம் பக்கத் தொடர்ச்சி

இவரைச் சிறப்பாக கௌரவிக்கும் நிகழ்வானது கடந்த 23.07.2017 அன்று மன்னார் வலயத் தமிழ் ஆசிரியர்களினால் மன்னாரில் உள்ள ஆகாஸ் ஹொட்டல் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது. மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி S.S. சுகந்தி செபஸ்ரியன், மன்னார் வலய ஏனைய உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், மன்னா பத்திரிகை ஆசிரியர் அருட்திரு. தமிழ்நேசன், வங்காலைப் பங்குத்தந்தை அருட்திரு. எஸ். ஜெயபாலன், மன்/ புனித ஆனாள் ம.ம.வி அதிபர் அருட்சகோதரர் S. சந்தியாகு (FSC), மடுத்தியான இல்லப் பொறுப்பாளர் அருட்திரு. இராயப்பு மற்றும் மும்மதத் தலைவர்கள், தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் அனைவரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல்: தமிழ்ப்பாட ஆசிரியர் குழுமம், மன்னார் வலயம்.**


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**

கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 180

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
A. கனிஸ்ரா,
கங்காணி தீவு, நானாட்டான்.



**இரண்டாம் பரிசு:**
ச. அன்ரனி,
பெரியபண்டிவிரிச்சான்,
மடு.

**மூன்றாம் பரிசு:**
J. டினோசன்,
பள்ளிவாசல் வீதி,
கீரி, மன்னார்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 69 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 180ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. யே. ஆன் யுஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
02. எஸ். மரிய தர்சினி, கண்டல், திருக்கேதீஸ்வரம்.
03. ராணி அரசரட்ணம், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
04. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
05. ச. பாவானி, குருவில், வட்டக்கண்டல்.
06. R. ஜெகநாதன், மடுக்கரை, நானாட்டான்.
07. அ. மெர்லின், பொன்தீவுகண்டல், முருங்கன்.
08. K. R. கலிஸ்ரஸ், சிதம்பரபுரம், ஆசிக்குளம்.
09. K. டொறிஸ் மீனா, நாச்சிக்குடா.
10. யே. கமிலஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
11. நி. டேனியல், செட்டிகுளம்.
12. வி. தாசன் டலிமா, தலைமன்னார் கிராமம்.
13. ச. கனிஸ்ரா, பாலைப்பெருமாள்கட்டு, வட்டக்கண்டல்.
14. புஸ்பா சேவியர், திருகோணமலை.
15. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
16. S. ஸ்ரெலன், சாளம்பன், ஆண்டான்குளம்.
17. பி. ஆன்டினூசிகா, கொக்குப்படையான், சிலாபத்துறை.
18. A. கிரியோன், சுகந்தபுரி, வங்காலை.
19. ஜ. அலோஜிகா, குருவில், வட்டக்கண்டல்.
20. கெ. யன்சன், பொன்தீவுகண்டல்.
21. M. T. மாலா, எமில்நகர், மன்னார்
22. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
23. P. மெரின் ஆன்சிகா, மணற்குளம், உயிலங்குளம்.
24. லோ. காந்தி, குருவில், வட்டக்கண்டல்.
25. P. அனற் ஜீவிகா, திருக்கேதீஸ்வரம்.
26. அருட்சகோதரி. அனிஸ்ரிலா, கார்மேல் க.சபை, அடம்பன்.
27. K. மடோனா, சிதம்பரபுரம், ஆசிக்குளம்.
28. உ. சுவர்ணாத், உயிலங்குளம், மன்னார்.
29. கெ. சுவீற்சன், பொன்தீவுகண்டல், முருங்கன்
30. A. J. பிரியா டொறின்சன், மூர்வீதி, மன்னார்.
31. K. ரசிக்கா, கற்குளம், சிதம்பரபுரம்.
32. நி. யாழிசன், குடியிருப்பு, செட்டிகுளம்.
33. ஜெ. ஆதனா, சாளம்பன், ஆண்டான்குளம்.
34. கெ. சுமீத், பொன்தீவுகண்டல், முருங்கன்.
35. செ. ஜெபராக்கினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
36. I. இருதயமேரி, கற்குளம், சிதம்பரபுரம்.
37. P. அனற் செறோன், திருக்கேதீஸ்வரம்.
38. சிந்துஜா, பள்ளிமுனை, மன்னார்.
39. S. ஜெபசுலைக்சினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
40. தீபிகா, அடம்பன், மன்னார்.
41. அ. செபஸ்ரியாம்பிள்ளை, சாளம்பன், ஆண்டாங்குளம்.
42. பி. அன்ரோ விதுஷன், கொக்குப்படையான், சிலாபத்துறை.
43. ஜெ. சீலன், முல்லைத்தீவு.
44. J. அனோஜினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
45. ச. புஸ்பாகரன், சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
46. டெபோறா மோகன்ராஜ், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
47. அ. றொசானி, சிறுக்கண்டல், முருங்கன்.
48. M. சுதர்சினி, வேப்பங்குளம், வவுனியா.
49. P. அனற்லீன், திருக்கேதீஸ்வரம், மன்னார்.
50. அனிஸ்ரா, திருகோணமலை.

## மோசமான காலநிலையின் ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கொழும்பு பேராயர் கர்தினால் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், இறைமக்கள் எனப் பலரது பங்களிப்புடன் இத்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது. மடுப்பரிபாலகர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் மற்றும் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் ஆகியோரின் நெறிப்படுத்தலில் மன்னார் மறைமாவட்டக் குருக்கள் மற்றும் ஏனைய குருக்களின் முழுமையான ஒத்துழைப்புடன் இவ்விழா சிறப்பாக இடம்பெற்றது.

## பிரஜைகள் குழுவின் புதிய ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

2017 - 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான ஆளுநர் சபைத் தெரிவுக்காக இடம்பெற்ற கூட்டத்தின் தேர்தல் வாக்களிப்பின்போதே இவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏனைய உறுப்பினர்களாக அருட்திரு. இ. செபமாலை, திரு. ந. தங்கராஜா, திரு. எஸ். புண்ணியலிங்கம், திரு. பி. ஏ. அன்ரனி மார்க், திரு. அ. சகாயம், திரு. சிங்கிலேயர் பீற்றர், திரு. கபிரியேல், மெதடிஸ்த திருச்சபையின் போதகர் அருட்திரு. N. ஜெகதாஸ், திருமதி. ஜெசி அரியரெட்ணம், அருட்திரு. எஸ். மார்க்கஸ், திருமதி. ம. உதயசந்திரா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 11 1975



உதிர்வு 14 09 2015

### செல்வி. ஜேம்ஸ் சுதாஜினி
(யோசவ்வாஸ்நகர், தோட்டவெளி)

பல்லாண்டு மகிழ்ந்திருப்போம் என நினைத்தோம்
ஈராண்டாய் உனை இழந்து தவிக்கின்றோம்.
வேரோடு சாய்ந்துவிட்ட மரம்போல
வேதனையால் வாடுகின்றோம் உனை எண்ணி
முத்துப் போன்ற உன் சிரிப்பும்
முழுமதி போன்ற உன் முகமும்
குயில் போன்ற உன் குரலும்
இனி எப்போ காண்போம், கேட்போம்?
காலங்கள் பல கடந்து போனாலும்
கடைசிவரை உன் நினைவு மங்காது
இறை சன்னிதியில் நீ இளைப்பாற
இறஞ்சுகிறோம் அந்த இறைவனிடம்!

**பிரிவால் நினைந்துருகும்,**
தம்பி, அத்தான்மார், அண்ணி, மருமகள், பெறாமக்கள்

## 24ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 09 1982

உதிர்வு 31 08 1993

### சுதர்ஷினி யேசுதாசன்

*"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"*

ஆண்டுகள் இருபத்திரண்டு ஆனாலும், உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? எப்படி ஆறுதல் அடைவோம்? காலையில் எம் தோட்டத்தில் பூக்கும் மலர்களைக் காணும்போது அதில் உள்ள அழகிய மலராக நீ மணம் தந்து எம் மனதைத் தொட்டுச் செல்கின்றாய். நடை பாதையில் என்றும் நீ எம் வழித்துணையாய் நடந்துவருகின்றாய். மாலையில் வீசும் இளம் காற்றில் நீ கலந்து எம்மை இதமாக வருடிச்செல்கின்றாய்! இனிய நல்மொழி பேசி, இதயத்தால் அனைவரையும் இணைத்து, ஆற்றல்கள் பல பெற்ற நீ, அன்று எம்மையெல்லாம் விட்டு, சொல்லாமல் கொள்ளாமல் பட்டென்று பறந்து போனாயே! அழகிய உன்முகம் காண ஏங்குகின்றோம். மீண்டும் நீ எம்மிடம் வாராயோ?

*உன் பிரிவினை நினைந்து உருகும் :*
*அம்மா, அப்பா, தம்பி, உறவுகள்.*

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி | 09ம் ஆண்டு நினைவஞ்சலி





### சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை | திருமதி. திரேசம்மா இராஜதுரை
(பாலைக்குளி, அடம்பன்.)

மலர்வு 25-12-1921 | மலர்வு 20-05-1933
உதிர்வு 02-09-2006 | உதிர்வு 10-09-2008

**அன்பின் அம்மா, ஐயா,** நீங்கள் இருவரும் இறைபதம் அடைந்து காலங்கள் பல கடந்தபோதும் நீங்கள் எங்களிடம் தந்துவிட்டுச்சென்ற இனியநல் நினைவுகள் எம் இதயத்தில் இனிதாய் நிறைந்து நிற்கின்றது. வான்வீட்டில் நிவீர் வளமுடன் வசித்தாலும், எம்மை மறவாது நாம் செல்லும் பயணங்களில் வழித்துணையாய் வருகின்றீர்கள்.

எமக்குத் துன்பங்கள் வரும்போது தோள்கொடுத்துத் துயரம் போக்குகின்றீர்கள். எமது மகிழ்வான வேளைகளில் நீங்களும் சேர்ந்து மகிழ்கின்றீர்கள். இறைவன் பாத மலர்களிலிருந்து எம் விண்ணப்பங்களுக்காய் இனிதாய்ச் செபித்திடுவீர்.

***என்றும் உங்கள் நினைவில் :***
***பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 05 1940



உதிர்வு 22 08 2016

### திரு. அந்தோனி சூசை
(பெரியமுறிப்பு, பெரிய குஞ்சிக்குளம்)


**"என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் அழியவிடாமல் இறுதியில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவான் 6.39)**

பாசத்தின் பிறப்பிடமே, குடும்பத்தின் சுடர் ஒளியே! ஐயா என்று அழைக்க நீங்கள் இல்லையே. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி ஓராண்டாகி நீங்கள் எங்கே ஓடி மறைந்தீர்கள் ஐயா எங்களை வனாந்திரத்தில் தவிக்கவிட்டு! ஓராண்டுகள் அல்ல ஓராயிரம் ஆண்டுகள் மறைந்தாலும் ஒருபோதும் உங்களை மறக்க மாட்டோம். இறைவனின் அமைதியில் இழைப்பாறுங்கள்!

**பிரிவால் நினைந்துருகும்,** குடும்பத்தினர்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 03 1968



உதிர்வு 07 09 2007

### திரு. இ. யோகராஜா
(கோவில்குளம், வவுனியா)

மகிமைக்குள் மகிழ்ந்து இருக்கும் பொன்முகமே யோகா!
பத்தாண்டு வந்தாலும் பக்கத்தில் இருப்பதுபோல் தெரியுதையா,
கண்ணீரில் எம்மையெல்லாம் கலங்கிடவே வைக்கின்றாய்.
எங்கு சென்றாலும் எம்முன்
நீதான் வழிகாட்டுவதுபோல் நாம் வாழ்கின்றோம்.
எண்ணத்திலும் எம்முடன் வாழும் நீ
விண்ணுலகில் என்றும் வீற்றிருப்பாய்
மதிப்புடனே மகனே!

**பிரிவால் நினைந்துருகும்,**
அம்மா, ஐயா, மனைவி, மகள், சகோதரர், சகோதரிகள்.

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 05 1958



உதிர்வு 01 09 2005

### திரு. பிலிப்பு யுவானி
(பிச்சகுளம், முருங்கன்)

**"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகின்றது" (1கொரி 15:42)**

ஆசையாய் அள்ளியணைத்து அன்பாய் தோளில் தூக்கி
சிறகுகள் முளைக்க முன்பே பறக்க கற்றுத்தந்தீர்கள்.
சிறகுகள் முளைத்து பறக்கும் இத்தருணத்தில் காலனவன்
உம்மைக் கவர்ந்து காவிக்கொண்டான்.
ஈர் ஆறு ஆண்டுகள் கடந்தும் உம் முகம் எம்மைவிட்டு நீங்கிச்
சென்ற நாளை நினைத்தே புலம்புகின்றது.
சிறகிருந்தும் பறக்கின்றோம்
உம் சிறகின் வலுவிழந்து நீங்காத் துயரத்துடன்.

**பிரிவால் நினைந்துருகும் - மனைவி, பிள்ளைகள்.**

## அதிர்வுகள் ........

**10ஆம் பக்கத் தொடர்ச்சி**

ஆனால் இவர்களின் வீர வரலாறுகளை மேடைமேடையாகப் பேசிப்பேசித்தான் தங்கள் வாக்குகளை இவர்கள் சேர்த்தார்கள் - சேர்க்க இருக்கிறார்கள் என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டி இருக்கின்றது.

### *வாதத்தை வலுப்படுத்தும் ஆதாரங்கள்*

இவ்விடயத்தைப்பற்றி வடமாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சி. தவராசா அவர்கள் 04.08.2017அன்று வெளியிட்ட பத்திரிகைச் செய்திக்குறிப்பில் விளக்குகின்றார். "வடக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு இன்று மூன்று (03) வருடங்கள் ஒன்பது (09) மாதங்கள் ஆகின்றது. இந்த நாற்பத்தைந்து (45) மாத காலத்திற்குள் வடக்கில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகளை வரவழைக்கக்கூடிய எதையும் வடக்கு மாகாணசபை செய்யவில்லை. மாறாக வரவிருந்த முதலீட்டு வாய்ப்புக்களைக்கூடத் தடுத்து அல்லது அசமந்தப் போக்கால் கைநழுவவிட்ட செயற்பாடுகளே நடந்தேறியுள்ளன. முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாக வடக்கு மாகாண இளைஞர்களின் விரக்திக்கு வடமாகாண சபையும் பொறுப்புக் கூறியே ஆகவேண்டும்" என்ற சி. தவராசாவின் கூற்றை வடமாகாண சபை முதலமைச்சர், அதன் உறுப்பினர்கள், வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மனச் சுத்தியோடு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மேற்சொன்ன யதார்த்த நிலையை 'உதயன்' நாளிதழ் ஆசிரியர் தலையங்கமும் உறுதிப்படுத்துகின்றது. "...முன்னாள் போராளிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நன்கு செம்மைப்படுத்தப்பட்ட முழுமையான ஒரு திட்டம் செயற்படுத்தப்படவேயில்லை. முக்கியமாக, தமது இளமைக் காலக்கல்வியையும் வாழ்க்கையையும் இந்த மக்களுக்காகத் தொலைத்த அவர்கள், திரும்பிவந்தபோது அவர்களின் பொருளாதாரம் குறித்துக்கூட எவரும் அக்கறைப்படவில்லை. சிறுகடன்கள் வழங்கப்பட்டதே தவிர, அவர்களுக்கென ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை..." என 05.08.2017 அன்று 'உதயன்' ஆசிரியர் தமது ஆசிரியர் தலைப்பில் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

### *இனிமேலாவது ஏதாவது உருப்படியாக நடக்குமா?*

வீண் விவாதங்களையும் உட்கட்சி முரண்பாடுகளையும் களைந்துவிட்டு இருக்கின்ற வளங்களை இனியாவது நன்கு பயன்படுத்தி எமது இளையோர் குறிப்பாக முன்னாள் போராளிகள் ஆக்கபூர்வமான தொழில் முயற்சிகளில் ஈடுபட - தம் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்த வட மாகாணசபை விரைந்து செயற்பட ஆவன செய்யவேண்டும். வேண்டுமானால் இவர்களின் நலன்களை கவனிப்பதற்காகவேனும் வட மாகாணசபையின் ஏதாவது ஓர் அமைச்சின் திணைக்களத்தின் அலுவலகத்தை - ஆளணியை ஒதுக்கி இவர்களின் வாழ்வு மேம்பட தெளிவான திட்டங்கள் தீட்டி செயற்படுத்த முன்வரவேண்டும். வீண் விவாதங்களையும் வியாக்கியானங்களையும் தவிர்த்து வட மாகாணசபையின் முதலமைச்சரும் அதன் உறுப்பினர்களும் செயலில் இறங்கவேண்டும்; இறங்குவார்களா?


## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். **- மன்னா நிர்வாகம்.**

## இல்லற வாழ்வில் 60வது ஆண்டு

# மணிவிழா வாழ்த்து !



**1957.07.16 - 2017.07.16**

**திரு. சூ. இ. கீதபொன்கலன் லியோன் (Guy)**

**திருமதி. லூசியா மரியம்மா கீதபொன்கலன்**

**(பிரதானவீதி, சின்னக்கடை, மன்னார்)**

இல்லற வாழ்வில் அறுபது ஆண்டுகளை நிறைவுசெய்து நேரிய உள்ளத்தோட்டு நிமிர்ந்து நிற்கும் எம் இனிய பெற்றோரே! இத்தனை ஆண்டுகள் உங்களைக் காத்த எல்லாம் வல்ல இறைவனுக்கு எம் இருகரம் கூப்பி நன்றி நவில்கின்றோம்.

அன்பு அப்பா, நீங்கள் பிரபலமான நாடக நடிகராய்த் திகழ்ந்தீர்கள். அக்காலத்தில் 'ஈழத்துக் காதல் மன்னன் ஜெமினி கணேசன்' என்று பெயர் பெற்றீர்கள். நற்பண்பும் நகைச்சுவையும் நிறைந்த நல்வாழ்வை வாழ்கின்றீர்கள். ஆழமான ஆன்மீக அனுபவத்திற்குள் கடந்துசென்று பலரையும் அதற்குள் அழைத்து வந்தீர்கள். "கிறிஸ்துவுக்குள் வாழ்வோர் என்றும் இளமையுடன் இருப்பர்" என்று சொல்லி அதற்கு இலக்கணமாய்த் திகழ்கின்றீர்!

அன்பு அம்மா, பொறுப்புள்ள அடக்கமான குடும்பத் தலைவியாய், ஆன்மீக வாஞ்சையுள்ளவராய்த் திகழ்ந்தீர்கள். உங்கள் இருவருக்கும் இறைவனின் அருளாசி நிறைவாய் வேண்டி யூபிலி வாழ்த்துக் கூறுகின்றோம்.

**வாழ்த்துவோர்** : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## மன்னார் தமிழ்ச் சங்கத்தின் காலாண்டு இலக்கிய சஞ்சிகை

# 'வெள்ளாப்பு' வெளியீட்டு விழா









மன்னார் தமிழ்ச் சங்கம் 'வெள்ளாப்பு' என்ற பெயரில் ஒரு காலாண்டு இலக்கிய சஞ்சிகையை வெளிக்கொணர்ந்துள்ளது. இதன் வெளியீட்டு விழா கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் புதிய நகர சபை மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எழுத்தாளர் எஸ். ஏ. உதயா அவர்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். முதன்மை விருந்தினராக ஸ்ரீ தர்மகுமார சர்மா குருக்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார், மன்னார் உதவிக் கடற்தொழில் பணிப்பாளர் திரு. பெ. சகாயநாதன் மிராண்டா, சட்டத்தரணி ஜனாப் எம். எம். சபுருதீன், சட்டத்தரணி திரு. எஸ். ஜெபனேசன் லோகு ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சஞ்சிகைக்கான வெளியீட்டு உரையை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் பொருளாளர் ஆசிரியர் ஜனாப் சிஹார் வழங்கினார். வெள்ளாப்பு சஞ்சிகையின் முதல் பிரதியை தர்மகுமார சர்மா குருக்கள் வெளியிட்டு வைக்க தமிழ் நேசன் அடிகளார் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது மன்னார் சைவக் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் ஸ்ரீ தர்மகுமார சர்மா குருக்களின் பணிகளைப் பாராட்டி சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டது.


வெள்ளாப்பு என்ற இந்த சஞ்சிகையின் முதல் இதழில் அண்மையில் காலம் சென்ற சமூக ஆர்வலர் மன்னாரைச் சேர்ந்த திரு. தே. பி. சிந்தாத்துரை அவர்களின் நினைவேந்தல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'அவைத்திலகம்' ஜேர்மன் பாலா அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். நன்றியுரையை மன்னார் தமிழ்ச் சங்ககத்தின் செயலாளர் திரு. நிக்ஷன் குரூஸ் நிகழ்த்தினார்.

வெள்ளாப்பு என்பது அதிகாலைப் பொழுதை, புலர்வைக் குறிக்கும் பேச்சு வழக்குச் சொல். இந்தச் சொல்லாடல் மன்னாரின் கடற்கரைப் பகுதி மக்கள் மத்தியிலும், விவசாயப் பகுதி மக்கள் மத்தியிலும் நடைமுறையில் உள்ள, மண் வாசனை மிகுந்த சொல்லாகும்.

## அமரர் பாக்கிய றஞ்சித் அடிகளாரின்

# 9ஆம் ஆண்டு நினைவு

## செப்ரம்பர் 26



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் நீக்கிலாப்பிள்ளை பாக்கிய றஞ்சித் அடிகளாரின் 9ஆம் ஆண்டு நினைவு தினம் இம்மாதம் (செப்ரம்பர் ) 26ஆம் திகதி நினைவுகூரப்படுகின்றது.

அன்றைய தினம் காலை 5.45 மணிக்கு புனித செபஸ்தியார் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அருட்பணியாளர் பாக்கியறஞ்சித் அடிகளார் 2007ஆம் ஆண்டு செப்ரம்பர் 26ஆம் திகதி பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வன்னிக்குள் எடுத்துச்சென்ற வேளை, அவரது வாகனத்தை இலக்குவைத்து இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 29 10 2002

உதிர்வு: 27 09 2015



**செல்வன். ஆனந்தம் அருண் யேசுராஜன்**

**(காத்தான்குளம், நானாட்டான்)**

அருண் எனும் அழகிய அருவியாய் வாழ்வில் வந்தாய்
வசந்தமாய் செழித்து விருட்சமாவோம் எனக்
காத்திருக்கையில் வேரறுத்துச் சென்றுவிட்டாயே!
கருகியது எம் உள்ளம் உன் வாழ்வின் முடிவை எண்ணி!

ஆசையாய் அன்பு முத்தங்கள் சொரிந்திடுவாய்
உன் பாச மழையில் நனைந்திட பரமன் தந்தது
பதின் மூன்று வருடங்கள் மட்டும்தானோ!
அன்று இதேநாள் செந்நிற பௌர்ணமி தோன்றும்
என காத்திருந்தாய், ஆனால் செங்குருதி தோய்ந்த
பௌர்ணமியாய் எம்மைவிட்டு நீ பிரிந்து சென்றாயே!

வார்த்தைகளில் வடித்துவிட முடியவில்லை எம் துயரை
உன் பூமுகம் கண்டு உறவாடக் காத்திருக்கும் எம்மை
காத்திடுவாய் என்றும் காவல் தூதனாய் இருந்து
உன் இனிய ஆன்மா இறைமடியில் இன்புற்றிருப்பதாக...!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு அப்பா, அம்மா, அக்கா, அப்பம்மா, அக்கா
குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 13 03 1953

உதிர்வு: 19 08 2017



**திருமதி. அருளானந்தம் பிளசம்**

**(பெரிய பண்டிவிரிச்சான், மடு)**

உங்கள் சிரித்த மலர்ந்த முகம்
எம் நெஞ்சில் நிறைந்திருக்கிறது
உங்கள் கபடமற்ற பேச்சு
எம் நினைவோடு கலந்திருக்கிறது.

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்துபோன மாயமென்ன
ஏற்க முடியாமல் ஏங்குகிறது எம் மனங்கள்!

காலன் கையில் சிக்குண்டு கண்மூடிவிட்டு எம்
கண்களில் நீரை ஊறவிட்டு
எங்கு சென்றீர்களோ ...?

இறைவனின் இல்லத்தில் இனிதாய் என்றும்
மகிழ்ந்திருக்க இறையருளை வேண்டுகிறோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்

## இத்தாலி தமிழர் ஆன்மீகப் பணியகத்தின் இறுவட்டு

# ஊருவிட்டு ஊரு வந்து ....




இத்தாலி தமிழர் ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் அருட்திரு. ப. விமல்ராஜ் (அமதி) அவர்களின் ஒருங்கிணைப்பில் "ஊருவிட்டு ஊரு வந்து ...." என்ற தலைப்பிலான கிறிஸ்தவ பாடல் இறுவட்டு ஒன்று அண்மையில் இத்தாலியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இறுவட்டிற்கான ஆசியுரையினை உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்திரு. எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் வழங்கியுள்ளார். புலம்பெயர்ந்த தமிழர் வாழும் பல்வேறு நாடுகளைச் சார்ந்தவர்கள் இப்பாடலைப் பாடியுள்ளனர்.